KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா ௦-௨-௦.

கலா நிலயம்.
V7. No.3. 18.1.1934.

JL
M211,N28KN
N34.7.3
199153

KALANILAYAM தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

OFFICE OF THE REGISTRAR ... 23 MAY 1934 MADRAS

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7] 1934 ஹு ஜனவரி மீ 18உ [No. 3

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 33
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 35
3. கம்பராமாயணம்—(பம்பைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 36
4. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு
(ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 39
5. உபரிடத முனிவன்
K. விஜயராகவாசாரியார் B.A. 41
6. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 42
7. மதுரைக் கோவை. (இடந்தலைப்பாடு)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 44
8. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(விநதாஸுத வாஹனுடை)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 46
9. வர்த்தமானம் 48

கலாநிலயம்

ஓதாதார் யாதாவார்.

தத்துவ விசாரணைகள் செய்து உண்மையை அறிய ஆராய்கின்றபோதன்றி ஏனைய காலங்களில் ஒருவன் தன்னை உடலென்றும் ஆன்மாவென்றும் வேறு வேறாகப் பிரித்துப் பேசுவானாயின் அன்னவன் இவ்விரண்டின் எதனைப்பற்றியும் யாதும் அறியாதவன் என்னவே நாம் மதித்தல் வேண்டும். இவ்வாறு பேசுவதோடு மட்டுமன்றி, உடலுக்குரியன இவையிவை என்றும் ஆன்மாவிற்குரியன இவையிவை என்றும் வேறு பிரித்துச் சில காரியங்கள் செய்யப்புகுமளவில், அவ்விரண்டுமே இல்லாதவன் என அவனை மதித்துவிடலாம். வாழ்க்கை என்பதை ஒன்றேயான முழுமையாக நினைத்து வாழ்கின்ற நீர்மையில்லாதார் ஒன்றும் பேசாதிருத்தலே நலம்; அவர் ஒன்றுஞ் செய்யாமல் இருப்பாரேயாயின் அந்த உபகாரமே கோடிபெறும். இப்படிப் பேசுவார் மானுட நல்வாழ்விற்குப் பொல்லாத தீயொன்று வைத்தவர்களேயாகின்றார். இன்னவர்தம் செய்கையால் வாழ்க்கையின் வெந்துஉதிர்ந்த சாம்பலே எங்கும் மலைபாகக் குவிகின்றது. கலைநலங் கனிந்த உணர்வுடையவர், வாழ்க்கையின் முழுமையிற்றானே மூழ்கிய சிந்தையரா யிருப்பாராதலின், பிரிவுகள்செய்து யாதும் பேசுவதும் செய்வதும் அவர் இயற்கையில் இருத்தற்கியலாது. கலையின் நலமெல்லாம் கைகடக்க விட்டுவிட்டுக் கட்டுரைப்பதெல்லாம் வாழ்க்கையனைத்தையும் பிடிசாம்பராக்கிக் கோடைக் காற்றிலே தூற்றிவிட்டுச் செல்லுகின்ற முயற்சியாய் முடிகின்றதே. கல்லாதார் பல சொல்லுவதும், கல்லாதார் அதனைக் கேட்பதும் ஆகி உலகடங்கலும் உழல்வதே இக்காலத்தின் கடனாகின்றது. கல்லாதார் ஒன்றுஞ் சொல்லலாகாதென்ன வற்புறுத்துவார் வள்ளுவர்; கல்லாதார் ஒன்றுங் கேட்கவும் ஆகாதென்னக் கம்பர் வற்புறுத்துவதன் நுட்பத்தை இக்கால உலகின்கண் அநுபவமுடையார் நன்கு தேர்ந்துகொள்வார். கேட்ட கேள்வியை ஆய்ந்து தெளிந்துகொள்வதற்கு அறிவு இன்றியமையாதது. கல்வியில்லாதவர்களுக்கு அறிவுதான் இருக்கக் கூடுமென்பது சற்றேனும் இயலாதென்பது வள்ளுவர் தெரிந்துரைத்த வாய்மைகளிற் சிறந்ததொன்று. ஆதலின் நல்லோர் வாயினின்று கேட்ட சொற்கள் கல்லாத புல்லோர் நெஞ்சில் இறையுந் தங்காமல், தாடகைக் கொடியாள் மார்பில் தைத்த இராமபாணமென்ன, அப்பால் கழன்று போய்விடும். இதனுடன் நின்றால் போதுமே. கேட்டவைகளின் தன்மையைத் தாம் கற்ற கல்விகொண்டு பெற்ற அறிவினது ஆற்றலால் ஆய்ந்துணரும் நிலையில் இல்லாதார் புல்லோர் சொல்லையே பெரிதெனப் பாராட்டி, அதனால் பொல்லாங்கு பல புரிபவராகின்றார். கம்பரும் திருவள்ளுவரும் கலந்து எய்துகின்ற முடிவு இது. இந்த முடிவின் உண்மையையும் நுட்பத்தையும் உணராமையாற்றான், உடலென்றும் ஆன்மாவென்றும் பிரித்துப் பிரித்து விவகரிக்கின்ற பேச்சுக்கள் இக்காலம் சனங்களிடையே செல்கின்றன. இது செல்வதாற்றான் சீரழிகின்றோம்.

"ஆன்மாவும் ஆயிற்று, கடவுளும் ஆயிற்று, காவியமும் ஆயிற்று, கலையும் ஆயிற்று, வயிற்றிற்கு வழி சொல்லுங்கள்" எனவே முழங்கும் மாக்களைப்பற்றி யாம் ஒன்றும் இங்குப் பேசவேண்டுவதில்லை. இதுகாறும், வயிற்றிற்கு வழி கேட்டவர்களேனும் சொன்னவர்களேனும் ஒருவரும் வாழ்ந்ததில்லை என்பதை நாடோறும் கண்டிருந்தும், பண்டைய பேச்சே பேசு

கின்ற இப்புல்லறிவாளர்களை என்னவென்று சொல்வது. இவர்களால் நன்மையிலதேனும், இவர் புதிது புரியவல்ல தீமையும் இல்லை. மற்று, ஆன்மா உடல் ஆகிய இவ்விரண்டிற்குந் தனித்தனி உறவினர்போல் உரைப்பவர்தாம் புதியபுதிய தீமைகளைக்கொணர்ந்து புகுத்துகின்றவர் ஆகின்றார். பகைவர்கிடக்க, நம்முடையநண்பர்களிலிருந்து நாம் காக்கப்பெறுவதேமிகவும்அவசியம். "நண்ப, உனக்கு உடல் ஒன்றுஉளது. அதனை நீ போற்றி வளர்க்கவேண்டும்; ஆன்மா ஒன்றுளது, அதனையும் நீ போற்றி வளர்க்கவேண்டும்; அதற்குரியன சில, இதற்குரியன சில; இவை யிரண்டையுந் தனித்தனி கற்றுத் தக்கனசெய்" எனச் செப்புங்கால், இதனினும் உறுதியுடைய அறிவுரை வேறு எங்குளதென மனிதர் மயங்குவது இயற்கையேயாயினும் அம்மயக்கத்தினின்று தெளிந்துகொள்ளற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளாதிருத்தல் பிழையாம். "உடலைக் காத்துக்கொண்ட பின்னன்றோ ஆன்மாவைப் பற்றிக் கருதவேண்டும்" என்னுஞ்சொல் காதிற்பட்டவுடன் மெய்க்கல்வி இல்லாதார் எல்லாரும், "நிரம்ப சரி" என்று தலையசைத்து ஓகை விளம்புகின்றனர். இன்னவர்களை இவ்வுலகின்கண் பெரும்பான்மையினராகி இருத்தல்பற்றி இவர்களால் கொண்டாடப்படும் ஒரு கருத்து 'நிரம்ப சரியாகத்தான்' இருக்கவேண்டுமென்று எண்ணிவிடலாகாது. பெரும்பான்மையோர் ஒன்றினைக் கொண்டாடுவார்களாயின் பெரும்பான்மை அது பிழையாகத்தானே இருக்கும் என்று கழறுகின்றவர், மாத்யூ ஆர்னல்ட் ஒருவரேயல்லர். எமர்ஸனும் அதே கருத்தினர். ஆஸ்க்கார் வைல்ட், செஸ்ட்டர்டன் போன்றவர்தம் கூரிய பரிகசத்திற்கு இலக்காகி நிற்பவர் இப் பொதுஜனப் பெரும்பான்மையோர். அவர்தமை மதிப்பாளிகளாக வைத்து விவகரிப்பது ஒருபோதும் பொதுஜன நன்மைக்கு ஆதாரமாகாது. ஆழ்ந்த கல்வியும் அனுபவமும் வாய்த்தவர் மிகச் சிலர்; எனினும் அவர்தாம் சிறந்த நூல்களின் மெய்ப்பொருளைத் தாமறிந்து பிறர்க்கு உணர்த்தவல்லவ ராகின்றார். அன்னவர் சொல்வனவற்றை ஏற்றுக்கொள்வதற்கன்றி ஏனையோர் வேறெதற்கும் உரியவரல்லர். இதனைவிட்டு, பொதுஜனங்களின் மதிப்பை ஒரு அளவையாகக் கொள்ளுதல் பேதைமையின்பாற் படும். பொதுஜனங்களில், இளைஞராயிருப்போர் எல்லாம்அறிந்தவர்களாகத் தம்மை நினைத்துக் கொள்கின்றனர், நடுவயதினர் எல்லாவற்றையும் சந்தேகப்படுகின்றனர், முதியோர் எல்லாவற்றையும் நம்பிவிடுகின்றனர்; அறிவாளிகளின் கண்களுக்கெதிரே காணக்கிடக்கும் உண்மை இதுவென்னின், பொதுஜனமதிப்பை எங்ஙனம் பாராட்டுவோம்.

உடலிற்குரியன தேடிக்கொண்டபின் ஆன்மாவைப்பற்றி நினைக்கலாம் என்னுமச் சொல் பொதுஜனப் பேதைமையேயாம்என்றிங்கு நாம்உரைப்பதுகொண்டு, உடலினைப் போற்றலே யாகாதென்ன மறுப்பதன்று எம் கருத்து. இனிச் சாகும் பிணங்களேயாக மனிதர் தம்மைப் பட்டினத்தடிகளோடு சிந்தித்திருக்கவேண்டிய நிலையைப்பற்றி யாம் இங்கு யாதும் செப்ப நினைத்திலம். அல்லது, இவ்வுடலினுல் கட்டுண்டு ஆன்மாவானது இடர்பெரிது படுகின்றது என்னும் நினைவை ஆராய்வதும் இக்கட்டுரையின் விடயத்திற்கு முற்றிலும் அயலாயதொன்று. உரோமாபுரிச் சக்கரவர்த்திகளில் ஒருவராகிய மார்க்கஸ் அரீலியஸ் என்பவர், வருத்தமுடன் உரைத்தவண்ணம், தன்னுடைய பிணத்தைத் தானே சுமந்து திரிகின்ற ஆன்மாவாக மனிதன் தன்னை மதித்துக்கொள்ளவேண்டிய சமயம் யாதென இங்கு இயம்பவேண்டா. ஆக்கைக்கே இரைதேடி அவலமாகின்ற செய்தியேபோல், ஆன்ம நினைவிலேயே நிலைநிற்பதன் மேன்மையைப் பற்றிய செய்திகளும் இக்கட்டுரைக்கு அயலாகின்றன. யாம் இங்கு உரைப்பதெல்லாம் உடலையும் ஆன்மாவையும் வேறு வேறாகப் பிரித்து விவரிக்கப்படாது என்பதே. நமக்கிது நல்லதென ஒன்று வேண்டப்படுமாயின், அது நம்முடைய நல்வாழ்விற்கு அவசியமானதென்ன முழுமையாகக் கொள்ளப்படுவதற் குரியதாய் அமைதல் வேண்டும். அவ்வாறு கொள்ளத் தகாததொன்று, ஆன்மாவிற்கும் நல்லதன்று, உடலிற்கும் நல்லதன்று.

உடலினைக் காப்பதற்கு உணவு இன்றியமையாதென்பது அளவுகடந்து அறிந்துகொள்ளப்பட்டிருக்கின்ற விடயங்களில் ஒன்று. ஒருநாளுணவை ஒழியென்றால் இவ்வயிறு ஒழியாமையுந் தக்கதே. எனினும், நமது முன்னையோர், "உண்ணுமல் ஒருநாளும் இருக்கவேண்டா" என்று நமக்குக் கற்பிக்கவில்லை. இதனைக் கற்பிக்க வேண்டியது மிகை என்ற காரணத்தால் விட்டவர்களும் அல்லர். ஒருநாள் இருநாள் பல நாட்கள் உண்ணுமல் இருந்தாலும், நல்வாழ்வு அதனுல் சிதையத்தான் வேண்டும் என்ற நியதியில்லை. உடல் மெலியலாம்; அதனுலென்,

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு

என்று திருவள்ளுவர் விளம்பிய இக் கடுகை நிறைக்க ஏழு கடல்களும் பற்றாவே.

உயிரையே இழக்கநேரினும் நேரலாம். அதனாற்றான் என்! இறப்பதாலும் நல்வாழ்வு சிதைவடைந்ததாகாது. "வீந்தவரேனும், ஈந்தவரல்லது இருந்தவர்யாரே" எனக் கேட்பார் நம் கம்பர்பெருந்தகை.

இவ்வாறு உடல்மெலிவும் உயிரிழவும் வெளிப்படத் தெரிந்து நிற்பினும், "உண்ணுமல் ஒருநாளும் இருக்கவேண்டா"என்றமொழி எழுந்ததில்லை. அதற்கெதிர்,"ஓதாமல்ஒருநாளும்இருக்கவேண்டா"என்ற வாசகமே விளம்பப்பெற்றது. ஏனெனில்ஓதாமல் கழிந்தஒவ்வொருநாளும் வாழாமல் ஒழிந்த நாளே என்பதை உணரவல்ல மெய்யறிவுடையவர் நம் முன்னையோர். இதற்கு நேரமில்லை என்றால் வேறு சிலவற்றிற்கு நேரம் இருப்பதெல்லாம் பாழ். "உற்றிடத் துதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது" கற்பவரன்றி யாரே வாழ்கின்றவர். அதுவும், "அறிவுசால் கற்பின் அறிவுநூல் ஆதல்வேண்டும்." ஓதாமல் ஒருநாளும் இருக்கப்படாதன வர்த்தமானப்பத்திரிகைகளோ அல்ல!

199153

தமிழ்ப்பாடம் 103.

வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[21-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பாஞ்சால மன்னன் வகுத்த சுயம்வரத்தில் அருச்சுனன் யந்திரத்தை எய்தறுத்துத் திரௌபதியைக்கொண்டுவரவும், பாண்டவர்கள் ஐவரும் தாய்சொற்கிணங்கி அவ்வொருத்தியை மணந்தனர். பிறகு திருதராட்டிரன் குருநாட்டை இரண்டாகப்பிரித்துத் தர, துரியோதனன் அத்தினாபுரியிலும், தருமன் இந்திரப்பிரத்தத்திலும் இருந்து தனித்தனியே அரசுபுரிந்தனர். அப்போது தருமபுத்திரன் தனது தம்பியரைக் கொண்டு திக்குவிஜயஞ் செய்து இராசசூயயாகம் முடித்த பெருமையைக்கண்டு பொறாமை அடைந்த துரியோதனன் பாண்டவரைச் சூதிற்கழைத்துத் தன் மாமன் சகுனியின் வஞ்சனையால் அவர்களது செல்வமும் அரசுங் கவர்ந்துகொண்டு அவர்களையும் அவரது மனைவி பாஞ்சாலியையும் அடிமையாக்கியதுமல்லாமல், அரசசபையில் அவளைப்பற்றியிழுத்துவந்து துகிலுரியச் செய்தான். கண்ணபிரானது அருளால் ஆடை மேன்மேல் வளர்ந்து அவள்மானம் காக்கப்பெற்றது கண்ட திருதராட்டிரன், அவளது கற்பிற்கு அஞ்சி, பாண்டவர்களை அடிமையினின்று விலக்கிச் செல்வத்தையுங் கொடுத்தனுப்ப விரும்பினுனாலும் துரியோதனன் அதற்கு உடன்படாமல் மறுத்துவிட்டனன். பின் யாவரும் கலந்து ஆலோசித்துப் பாண்டவர்கள்பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருஷ அக்ஞாதவாசமும்செய்து மீள்வாராயின் அவர்களது நாட்டையும் மற்றுள உரிமைகளையும் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமெனத் தீர்மானஞ் செய்தனர். இதற்குத் தருமனும் ஒவ்வினுன்; துரியோதனனும் ஒவ்வினுன்; அப்பொழுதுதிரௌபதி, "நாம் அடிமைகளாகவே சென்று காட்டில் திரிவதால் என்ன பயன். இன்னொருதரம் சூதாடி நம்முடைய உரிமையையேனும் இப்பொழுதே வென்று பெறுவோமாயின் நலம்" என்று உரைக்க அதற்கிணங்கித் தருமராசன் தான் செய்த புண்ணியத்தை யெல்லாம் பணயம்வைத்து மறுசூது ஆடியதில் சகுனி தோற்கப் பாண்டவர்கள் அடிமை நீங்கினுரேனும் தம் கடவநாளைக் கழிக்கக் கானகஞ் சென்றனர்.

அடவியிலுறைந்த பாண்டவர் மீளாதவாறு அவர்களைப் பற்பல விதங்களில் கொன்று தீர்ப்பதெனத் துரியோதனன் செய்த சூழ்ச்சிகளினின்றும் இவர் கண்ணருளால் தப்பிப் பதின்மூன்றுமாண்டு விராடநகர் அடைந்து மாறுவேடம் பூண்டிருக்க அங்குப் படையெடுத்துவந்த துரியோதனனைப் பொருதுதோல்விகண்டனர். இறுதியில் பாண்டவர் வேடம்நீங்கித் தம்மை தெரிவித்துக்கொள்ளவும்விராடமன்னன் மிக மகிழ்ந்து தன்மகள் உத்தரையை, அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும்பிறந்திருந்த மகன் அபிமன்யு என்பானுக்கு மணஞ்செய்வித்து உபப்பிலாவியம் என்னும் பட்டணத்தைப் பாண்டவர்க்கு அமைத்துத்தந்தான்.

இனி, முன்னே உரைத்த வாக்கின்படி தமது நாட்டைக் கேட்க உலூகமுனிவனைப் பாண்டவர்கள் துரியோதனனிடம் அனுப்பினர். அவன்மறுக்கவே இவர் போருக்கு ஆயத்தம் செய்யலாயினர். கிருஷ்ணனும் இவர்களுக்குத் துணையாய் வந்துசேர்ந்தான். அச்சமயத்தில், திருதராட்டிரன் தனது நண்பனுகிய சஞ்சயமுனிவனைப் பாண்டவர்களிடம் அனுப்பிப் பாண்டவர்கள் அரசிற்கு ஆசைப்படுவது அழகு அன்றுஎன்றும், தவம் முதலியன செய்து மறுமையின்பத்தை நாடுவதே அவர்களுக்குத் தக்கதென்றும் இதுபோல் பலநீதிகளையும் சொல்வித்துப் போர்புரியாமல் ஒழியும்படி முயன்றதற்கிவர் இணங்கவில்லை.

பாரதக் கதையில் இந்த இடத்திலிருந்து கிருஷ்ணனைத் தூது அனுப்பும் இப்பாகம் தொடர்கின்றது.

ஞானமன்பொ டினிதுரைத்து ஞானமுனி
யகன்றதற்பின் சாம பேத
தானதண்ட மெனநிருபர் தருமமுறை
மையிற்புகலுந் தகுதி நோக்கித்
தூநறுந்தண் டுளவோனைத் தூதுவிடு
வதற்கெண்ணிச் சுனைக டோறு
மேனலந்தண் கிரிப்பெருந்தே னிறைக்குமெழிற்
குருநாட னியம்பு வானே.

பதவுரை.

ஞானம் - மெய்யறிவுடைய, முனி - சஞ்சயமுனிவன், அன்பொடு-அன்பின் திறத்தைப்பற்றியும், ஞானம் - தத்துவ நிலையைப்பற்றியும், இனிது-இனிமையாக, உரைத்து-தருமனுக்குச் சொல்லி, அகன்றதன்பின் - போனபிறகு—

கிரி - மலைகள், ஏனல் - தினைப்பயிரிலிருந்து பாய்கின்ற, தண்-குளிர்ச்சி பொருந்திய, பெரும் - மிகுதியான, தேன் - தேனை, சுனைகள்தோறும் - சுனைகளிலெல்லாம், நிறைக்கும் - நிறைக்கின்ற, எழில் - அழகு வாய்ந்த, குருநாடன் - குருநாட்டரசனுகிய தருமபுத்திரன்—

நிருபர் - அரசர்களுக்குரிய, தருமமுறைமையில் - தருமவிதிகளில், சாமம் பேதம் தானம்தண்டம்என - சாமம் பேதம் தானம் தண்டம் என்று, புகலும் - வரிசையாகக் கூறப்பட்டிருக்கின்ற, தகுதி - தகுதியை, நோக்கி - உத்தேசித்து,—

தூ - பரிசுத்தமான, நறும்- வாசனை பொருந்திய, தண் - குளிர்ச்சியுடைய, துளவோனை - துளசிமாலையணிந்த கிருஷ்ணனை, தூது - துரியோதனனிடத்தில் தூதனுக, விடுவதற்கு - அனுப்புவதற்கு, எண்ணி - நினைத்து, இயம்புவான் - (பின்வரும் வாசகங்களை) சொல்லலானுன்.

விரிவிரை:—பகைவரைத் தன்வழிப்படுத்துவதற்கு இராஜதர்மத்தில் நான்குவித உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்னவைகளில், சாமம் என்பது நல்லவார்த்தைகளால் சிநேகமாக முயல்கின்ற முறை. அதற்குப் பகைவன் உடன்படானுயின் பின் பேதம் கையாளப்படும். பேதம் எனப்படுவது, சிறிது சினந்து பயமுறுத்துவதும், தன் எதிரியினுடைய பகைவனுல் அவனுக்குப் பயமுண்டாகும்படி செய்வதும், அவனுடன் நட்பாயிருப்பவர்களைப் பிரித்துவிடுவதுமாம் பேத உபாயமும் பயன்படவில்லை யெனின், வழக்கிலிருக்கும் பொருளில் ஒருபாகம் விட்டுக்கொடுத்து.

'ராஜி' செய்து கொள்வதாகும்; இதனைத் தானம் என்பர். தானத்துக்கும் அப்பகைவன் இணங்கானாயின் இறுதியில் தண்டுகொண்டு போர்செய்து அவனை அடக்குவதேமுறை. தருமராஜன் சாம உபாயத்தை முதலில் கையாள்வதே தகுதியென்று நினைத்து, உலூகமுனிவனை ஒருதரம் தூதனுப்பியதுபோதாமல் கண்ணனை மீண்டும் அனுப்பக் கருதினான்.

இப்பொழுது நாடொன்றும் தருமனுக்கு இல்லையாயினும், இனிக் குருநாடு முழுவதும் அவன் ஆள்வதற்கு இருக்கின்றானாகையால் கவி, வருவதுநோக்கி இப்பொழுதே அவனை எழிற் குருநாடன் என்று அழைக்கின்றார்.

"துரியோதனாதியரும் நின் தம்பியர்களே என்னும் அன்பு பற்றி நீ நாட்டினை மீட்டும் கேட்காமல் இருந்தால்தான் தகாதோ," என்றும், "ஞான நெறியை மேற்கொள்வது உனக்குத் தகுமாதலால் அரசினை வேண்டாமல் நீ வெறுத்தலே நலம்" என்றும் சஞ்சயன் "ஞானம் அன்பொடு" இனிது உரைத்தனன்.

இலக்கணம்.

III. A. நிலைமொழி அ இ உ என்னும் சுட்டிடைச் சொற்களுள் ஒன்றாகவேனும், எ, என்னும் வினா இடைச்சொல்லாகவேனும் இருக்க, வருமொழி முதலில் மெய்வருதல்:—

i. வருமொழி முதலில் யகரம் தவிர வேறு எந்த மெய் வந்தாலும் அந்தமெய், நிலைமொழியாகிய அ இ உ எ என்னும் நான்கு இடைச்சொற்களோடு புணரும்போது இடையில் இரட்டும்:—

அ + காடு = அ + க் + காடு = அக்காடு
இ + சேனை = இ + ச் + சேனை = இச்சேனை
உ + மரம் = உ + ம் + மரம் = உம்மரம்
எ + ஙனம் = எ + ங் + ஙனம் = எங்ஙனம்
அ + வளை = அ + வ் + வளை = அவ்வளை
இ + நாள் = இ + ந் + நாள் = இந்நாள் [தன்
உ + வேந்தன் = உ + வ் + வேந்தன் = உவ்வேந்

இந்த உதாரணங்களில், வருமொழி முதலில் எந்த மெய் வந்திருக்கின்றதோ, அந்த மெய்யே இடையில் இரட்டக் காண்கின்றோம்.

இங்கு, அ இ உ என்பன, ஒன்றைச் சுட்டிக்காட்டவும், எ என்பது ஒன்றை வினவவும் பொருள்படும்படி மற்றச் சொற்களோடு சேர்ந்துவருவதால், இவைகளை இங்கு இடைச்சொல் என்கின்றோம் (5-வது வால்யூம், 364-வது பக்கம்). எனினும். அ இ உ எ என்பன சுட்டுப் பொருளினும், வினாப்பொருளினும் வராமல் தம்மைத் தாமே குறித்து நிற்கலாம். அப்பொழுது அவை தாம் ஓர் எழுத்தாய் இருத்தலைத் தெரிவிக்கும். ஒருவன் எழுதிய கடிதத்தைப் பார்த்து "இதில் அ கலைந்துவிட்டது; இ நீண்டிருக்கின்றது, உ வளையவில்லை, எ கோணியது" என்போமாயின், இவை இங்குச் சுட்டுவதும் வினவுவது மின்றி, அவ்வவ்வெழுத்துக்களின் பெயரையே உணர்த்துவதால், இவை இடைச்சொற்களாகா. எனினும் இவை இப்படித் தம்மையே உணர்த்தி நிலைமொழியாய் நிற்கும் போதும் வருமொழிமுதல்மெய் இடையில்இரட்டும்.

உதாரணம்:—

அ + வளைந்தது = அ + வ் + வளைந்தது
= அவ்வளைந்தது
இ + நீண்டது = இ + ந் + நீண்டது = இந்நீண்டது
உ + பெரிது = உப்பெரிது
எ + கெடும் = எக்கெடும்.

ii. நிலைமொழி, அ, இ, உ, எ, என்னும் இடைச்சொற்களிலொன்றாக இருக்க (அல்லது அவைதம்மையே உணர்த்தி நிற்க) வருமொழி முதலில் யகரமெய் வருமாயின், இடையில் வகரமெய் தோன்றும் (முன்போல் யகரமெய்யே இடையில் இரட்டாது)

அ + யானை = அ + வ் + யானை = அவ்யானை
இ + யாழ் = இ + வ் + யாழ் = இவ்யாழ்
உ + யாறு = உ + வ் + யாறு = உவ்யாறு
எ + யாப்பு = எ + வ் + யாப்பு = எவ்யாப்பு

[குறிப்பு:—ய, யா, யி, யீ, யு, யூ, யெ, யே, யை, யொ, யோ யௌ, என்னும் யகரவுயிர்மெய் வரிசையில், யா என்னும் ஒரு எழுத்துத்தான் தமிழில் மொழிக்கு முதலில் வரக்கூடும். மற்று, யமன், யுவதி, யூகம், யோகம், யௌவனம், போன்ற சொற்கள் தமிழல்ல, வடமொழிகளாம். இவைகள் வருமொழிகளானாலும், வ் தோன்றும் என்றே கொள்ளவேண்டும்.]

அ + யாது = அ + வ் + யாது = அவ்யாது
இ + யாது = இ + வ் + யாது = இவ்யாது

என்பனபோல இந்நிலைமொழிகள் சுட்டுக்களாயும் வினாவாகவும் ஆகாமல் தம்மை யுணர்த்தி நிற்கும் போது, வருமொழி முதலில் யகரம் வரின் இடையில் வ் என்னும் மெய்யே தோன்றும்.

[சில சமயம், அ + யானை = அவ்வியானை, இ + யாழ் = இவ்வியாழ், என இவ்விதம், வ் தோன்றுவதுமல்லாமல்

அ + யாழ் = அ + வ் + யாழ் = அ + வ் + இ + யாழ்,
= அவ் + வ் + இ + யாழ் = அவ்வியாழ்

என ஒரு இகரமுந்தோன்றிப் புணரக்காணலாம். இதனை வேறோரிடத்தில் விளக்குவோம்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—1. பம்பைப் படலம்

[31-வது பக்கத் தொடர்ச்சி]

ஒன்றே நினைத்துஞ் செய்வன பலவே.

பம்பைப் பொய்கையின் கண் குழுமிய புள்ளினங்கள் செய்த ஒலியினைக் கம்பர் விளம்ப நினைத்தனர். அவ்வயின்,

களனவி லன்னமே முதல கண்ணகன்
தளமலர்ப் புள்ளொலி தழங்க வின்னதோர்
கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாதலால்
வளநகர்க் கூலமே போலு மாண்பது.

[அகன்ற இதழ்களையுடைய தாமரை மலர்களில் உள்ள ஒலி செய்கின்ற அன்னம் முதலிய பறவைகளின் ஒலிகள் ஒலிப்பதனால், இன்னவகை ஒலியென்று விளங்காத கிளர்ச்சியுடையதாயிற்று. ஆதலால் அந்தப்பொய்கையானது, வளப்பமுடைய நகரின்கண் உள்ள கடைத்தெருவைப் போன்ற மாட்சி உடையது.]

கடைத்தெருவின் கிளர்ச்சி எவ்வகைத் தென்பது என்றுமே அறிவதற்கரியது. ஆவணத்தில் முழங்கும் ஓதை இப்புட்கள் செய்யும் முழக்கம்போல் தெரிவரிதாகிக் கலந்திசைப்ப தன்றியும் பயனிலாக் கிளவியாலும் பம்பையை உழக்கிய ஒலியையே ஒக்கின்றது போலும். ஆவணத்தை இவ்வணம் குழப்பினாரெனின் கம்பர் ஆரியத்தையும்விட்டிலராகி, இதே செய்தியை மீண்டும்,

ஆரிய முதலிய பதினெண் பாடையிற்
பூரிய ரொருவழி புகுந்த தாமென
ஓர்வில கிளவிக ளொன்றோ டொப்பில
சோர்வில விளம்புபுட் டுவன்று கின்றது.

[ஸமஸ்கிருதம் முதலிய பதினெட்டுப் பாஷைகளைப் பேசுகின்ற கீழ்மக்கள் ஓரிடத்தில் கூடியதுபோல, இன்னதென்று தெரிந்துகொள்ள மாட்டாதவைகளும், ஒன்றுக்கொன்று ஒத்திராதவைகளும், ஓய்தல் இல்லாதவைகளும் ஆகிய ஒலிகளைச் செய்கின்ற பலவகைப் பறவைகள் நெருங்கி யிருக்கப்பெற்றது அப்பொய்கை.]

என்றவோர் செய்யுளும் பாடியிருக்கின்றார். ஒரு பாடைப் பூரியர் ஒருவழிப்புகுந்த ஆரவாரமே போதும். மற்று, பல பாடைப் பூரியர் புகுந்தக்கால் இயம்பவேண்டுமோ. ஆயினும் ஒன்று. ஆரியத்துடன் சேரக் குறிக்கப்பெற்றுள பாடைகள் பதினெட்டாமெனின் தமிழ் இங்கு இத்தொகுதியின் விலகிநிற்கின்றது. சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுவம் குடகம் கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம் கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம் என்னும் இவை தமிழ் ஒழிந்த பாடைகள் பதினேழாம். இவைகளுடன் ஆரியமுஞ் சேர்ந்து கம்பரின் கணக்கின்படி ஒருவழி புகுந்த பூரியர் பாடைகள் பதினெட்டு ஆகின்றன. ஓர்வில கிளவிகள் ஒன்றோடொப்பில சோர்வில விளம்பும் கீழ்மக்கள் சேர்க்கையினின்று கம்பர் தம்மை விலக்கியதற்குத் தமிழர் நன்றிமிக உடையவ ராதல்வேண்டும். தழற்கடவுள் தந்த தமிழில் பூரியர் இருத்தலே இயலாதென்றோ, பூரியரோடு தமிழர் சேராரென்றோ, வேறு யாது கருதியோ தமிழ்மொழிக்கோர் தனிப்பேரரசாகிய இந்தப்புலவர் பெருமான் இங்ஙனம் இயற்றினார்! எனினும், இச்செய்யுளைச் செப்பித் தமிழர் தருக்குவாரெனின், ஆரியரும் இதனில் தம்பெருமைக்கு அமையவரும் பொருளொன்று கண்டு பெருமிதங் கொள்ளலுங் கூடுமென்பதை மறத்தலாகாது. 'ஆரியம் முதலிய பதினெண் பாடை' என்றதற்கு, இங்குக் குறித்த பாடைகள் பதினெட்டில் ஆரியமும் ஒன்றாம்படி 'முதலிய' என்னுஞ் சொல்லைப் பொருள் செய்தலால் இப் பூரியர்சேர்க்கையினின்று தமிழ்மொழி தப்பநேர்ந்தது. அவ்வாறின்றி, 'முதலிய' என்னுஞ்சொல்லை 'முதலாக உடைய' என்னும் பொருளில் கொண்டக்கால், ஆரியத்தைத் தம் முதல்மொழியாகவுடைய வழிமொழிகள் பதினெட்டும் குழுமியதாகும். எனின், ஆரியமே முதல்மொழி எனப் பாராட்டித் தமிழை வழிமொழிக்கு இறக்கிய தன்றியும், சிற்றினக் கூட்டத்தில் ஆரியரைச் சேர்க்காத சிறப்பையும் இச்செய்யுள் அவர்களுக்கு நல்கிய நலத்தினைக் காணலாம். இவ்விரண்டுபொருள்களில் எதனைத்தான் கம்பர் தம் மனத்தில் வைத்துப் பேசினார் என்ன யாரே துணிந் துரைக்கவல்லார். இப்படி இரு பொருள்களும் பொருந்தவல்ல தன்மையால், ஓதுவோர் உள்ளம் ஒருபாற்படாமல் ஊசலாடும் வகை சொற்களை அமைப்பது கம்பர்திறத்தில் புதுமை யன்று. முன் தயாதன் தன்பரிவாரம் புடைசூழவெழுந்து, தன்திருமகன் மணவினை தெரியக்காணும் உவகையினோடு மிதிலைக்கு வழிப்பட்டபோது, இடையிலே ஓர் தண்ணறும் பொழில்கண்டு மானமர் நோக்கினாரும் மதுகை மைந்தரும் மலர்கொய்து விளையாடிய அழகினை மொழிதரு மகவயின்,

ஊக்க முள்ளத் துடைய முனிவரால்
காக்க லாவது காமன்கை வில்லெனும்
வாக்கு மாத்திர மல்லது வல்லியிற்
பூக்கொய் வாள்புரு வக்கடை போதுமே

[தவத்தின்கண் ஊக்கமுடைய முனிவர்களால் "காக்கலாவது காமன் கை வில்" என்னும் இது வார்த்தையளவே அல்லது, கொடியிலிருந்த மலர்கொய்கின்ற ஒருத்தியின் புருவத்தின் கோடி அம்முனிவர்களது தவஊக்கத்தைத் தளர்வித்து மையல் விளைவிக்கப் போதியதாவதைக் காணலாமே.]

என்னுமச் சித்திரம் இங்கு நினைவின்கண் வந்து நிகழ்கின்றது. "முனிவராலேயே காக்கல் ஆவது காமன் கை வில்லோ," அல்லது, "முனிவராலும் காக்கலா அது காமன் கை வில்லோ,"—எதனை நினைத்து இயம்பினார் அப் பொழிலிற் புகுந்த புலவர்? அவ் விரு பொருள்களும் ஒவ்வோர் வகையில் பொருந்தவல்ல உண்மையே. மற்று இங்கு, "ஆரியம் முதலிய பதினெண்பாடை" என்னும் இதற்குரிய இருபொருள்களும் ஒருங்கே அமையக்கொள்ளல் இயலாது. ஆரியச் சார்பினரும் தமிழின்சார்பினரும் தம்முள் இப்பாசுரத்தை இறுகத் தழுவி இகல்கொள்வாராயின், இருவர் திறத்தும் தனித்தனி நின்று துணைபுரியவல்ல தகைமை சான்றதாம் இது.

பொய்கையின் தன்மையை இன்னவாறெலாம் இயம்பிய கம்பர், இனி அதன்கண் தோன்றுகின்ற சில நிகழ்ச்சிகளைக் கூறுவாராகின்றார்—

அரிமலர்ப் பங்கயத் தன்ன மெங்கணும்
புரிகுழல் புக்கிடம் புகல்கி லாமையாம்
திருமுக நோக்கல மிறந்து தீர்துமென்
றெரிபுகு வனவெனத் தோன்று மீட்டது

[வண்டுகள் மொய்க்கின்ற செந்தாமரை மலரில் உள்ள அன்னப் பறவைகள் "சுருண்ட கூந்தலையுடைய சீதை சென்றஇடத்தை யாம் எங்குந் தெரிந்து சொல்லமாட்டாமையால், அழகிய இவ் விராமனது முகத்தைப் பாராமல் இறந்தொழிவோம்" என்று நெருப்பில்பாய்வனபோன்று தோன்றும் தன்மையையுடையது அப்பொய்கை.]

என்று விளம்புகின்றனர். இராமனது திருமுகத்தை எதிர்நோக்கக் கூசினவாய அன்னங்கள் அனல்புகுந்தழிவதொப்பத் தாமரையில் ஏறினவென்னும் இத்தற்குறிப்பேற்றம் சாலப் பொருத்தமுடையது. அன்னத்திற்குத் தாமரை இப்பொழுது தீயெனலாயது பண்டைப்பழி தீர்க்கின்ற முறையிலுந் தக்கதேயாம். முன் ஓரிடத்தில்,

சுளியு மென்னடை தோற்க நடந்தவர்
ஒளிகொள் சீறடி யொத்தன வாமென
விளிவு தோன்ற மிதிப்பன போன்றன
நளின மேறிய நாகிள வன்னமே

[செந்தாமரை மலரின்கண் ஏறிய மிகவும் இளமையான அன்னங்கள், தமது மெல்லிய நடை தோற்கும்படி நடக்கும் மாதர்களது ஒளிபொருந்திய சிறிய பாதங்களை அம்மலர்கள் ஒத்திருந்தனவென்று அவைகளைக் கோபிக்கும். கோபித்து, அந்தக் கோபம்தோன்ற அம்மலர்களை மிதிப்பன போன்றன]

எனப் பகர்ந்திருப்பதை நினைக்குங்கால், தாம் நடை தோற்க நடந்தவர் அடிகளை ஒத்திருந்த காரணமே பற்றி முனிந்து மிதித்த அக் குருகினத்திற்குத் தாமரை நெருப்பேயாய் முடிவது யாதும் வியப்பன்று.மற்றவரை வருத்துவதெல்லாம் தாம் வருந்துவதற்கு ஓர் இடஞ்செய்துகொண்ட சூழ்ச்சியாய்த்தீர்வதே இவ்வுலகின் இயற்கை.

இராமனைத் தாம் காண ஆற்றாமல் அன்னங்கள் தீப்புகுந்தனவென்னின், இராமன் தம்மைக் காணலாகாதென மறைவனவும் அப்பொய்கையின்கண் உள-

களிப்படா மனத்தவன் காணின் கற்பெனுங்
கிளிப்படா மொழியவள் விழியின் கேளெனத்
துளிப்படா நயனங்க ளிளிப்பச் சோருமென்
றொளிப்படா தாயிடை யொளிக்கு மீனது

[களிப்பிழந்த மனத்தனாகிய இராமன் நம்மைக் கண்டால், கற்பின் உருவமே போன்றவளும், கிளியினிடத்தும் வாய்க்காத இனிமை வாய்ந்த சொற்களையுடையவளும் ஆகிய சீதையின் கண்களுக்கு இணையானவைகள் என்று இரங்கி, ஒருபொழுதும் அழுதிராத தன் கண்கள் நீர்த்துளி சிந்தச் சோர்வான், என்று கருதி, வெளிப்படாமல் அங்கு ஒளிந்துகொள்கின்ற மீன்களையுடையது]

மீன்கள் இவ்வண்ணம் நீரிடை மூழ்கி ஒளிக்கின்ற தோற்றத்தைக் காணுங்கால் அவை இராமனுக்கு இரங்கியே இது செய்தனவெனச் சிந்திக்கலாம் ஆயினும், அதற்கு வேறோர் காரணம் இருத்தலும் அமையும்;—

ஏறு நீர்நிழ லிடையிடை யெறித்தலிற் படிகம்
போலும் வார்புனல் புகுந்துள வாமெனப் பொங்கி
ஆறு மீன்கண மஞ்சின வலம்வர வஞ்சிக்
கூல மாமரத் திருஞ்சிறை புலர்த்துவ குரண்டம்.

[அப்பொய்கையில் பொருந்திய நீரில் இடையிடையே (கரையிலுள்ள பறவைகளின்) பிரதிபிம்பங்கள் விளங்குவதால், களித்து விளையாடும் மீன் குட்டங்கள், தம்மைத் தின்பதற்கு இவை இந்தப் பெரிய நீரினுள் மூழ்கியிருக்கின்றனவென்று எண்ணிப்பயந்து சுழன்றுவராமல் பதுங்கும்படி, கரையிலுள்ள பெரிய மரங்களில் அமர்ந்திருந்த கொக்குக்கள் தம் பெரிய சிறகுகளை உலர்த்திக்கொள்வன]

இராமன் துயர் மிக எய்தாவண்ணங் காக்கவோ, மற்று, தம் உயிர் போகாவண்ணம் காக்கவோ மீன்கணம் அப்பொய்கையின்கண் பதுங்கி யொளிந்தன? —இவை சில, அவை சில போலும். சீதையை இச்சமயம் நினைவுசெய்துதருதல் தகாதென இரங்கியே மீன்கள் ஒளித்தன வென்னின்,

கவள யானைய ஞற்கந்தக் கடிநறுங் கமலத்
தவளை யீகல மாவது செய்துமென் றருளித்
திவள வன்னங்க டிருநடை காட்டுவ செங்கண்
குவளை காட்டுவ துவரிதழ் காட்டுவ குமுதம்.

[கவளம் உண்டு வளர்ந்த யானைபோன்ற இராமனுக்கு வாசனையுடைய தாமரையிலுள்ள திருமகளாகிய சீதையை மீட்டுவந்து கொடுக்கும் திறமையில்லோம்; ஆயினும் எம்மால் இயன்றதைச் செய்வோம் என்று அருள்கொண்டு இரங்கி, அன்னங்கள் துவளத்துவள நடந்து அச்சீதையின் நடையழகைக் காட்டுவனவாயின. குவளைகள் அவளது சிவந்தகண்களின் வண்ணத்தைக் காட்டின. குமுத மலர்கள், அவள் அதரத்தின் வண்ணத்தைக் காட்டின.]

மீன்கள் ஒளித்துக்கொள்வதற்கும், மற்றிந்த அன்னம் குவளை குமுதம் முதலியன சீதையின் அழகைத் தனித்தனி நினைவுசெய்து காட்டுவதற்கும், அவை தாம் இராமன்பால் கொண்ட இரக்கமே காரணம். உள்ளத்தின் இயக்கம் ஒன்றேயா யிருக்க அது, எதிரெதிர் வேறுபட்ட செய்கையாய்த் தோன்றுவது யாதும் வியப்பில்லை என்பதை இதனால் உணரலாம். மீன்கள் மறைந்ததும் இராமனை வெறுத்ததால் அன்று; அன்னம் முதலியன வெளிப்பட்டு நின்றதும், சீதையின் நினைவினால் இராமன் நலியும்படி யன்று. பரிவினால் இவை செய்தன. எனினும் செய்கைகளோ மாறுமாறாகி நிற்கின்றன. ஆதலின், செய்கைகொண்டே ஒருவர் சிந்தனை இன்னபடி இருந்ததென்று சொல்ல இயலாமைக்கு, இம் மீனும் அன்னமுமே அயலபல் நின்று சான்று கூறுகின்றன.

இன்ன தன்மையதாகிய பம்பைப் பொய்கையில், வாளையும் நீர்நாயும் தேரையும் கலந்து புரிகின்ற ஓர் காட்சியினைக் கண்டு வியக்கலாம்—

வலிந டத்திய வாளென வாளைகள் பாய
நிலைந டத்திய திரைதொறு முகள்வன நீர்நாய்
கலிந டைக்கழைக் கண்ணுள ரெனநடங் கவினப்
பொலிவு டைத்தெனத் தேரைகள்புகழ்வனபோலும்

[வலிய வீசிய வாள்கள்போல வாளைமீன்கள் பாய, வரிசைநிலை பிறழாமல் செல்கின்ற அலைகளில் நீர்நாய்கள் புரள்வனவாகும். இது, காலிற்சலங்கைகட்டிய ஒலியோடு கூடிய நடையை உடைய கழைக்கூத்தாடிகள் வாளின் மேல்நடிப்பதுபோன்ற அழகைக்காட்டுவதால், அதனைக் கண்டு, இந்நடனம் நன்றாக இருக்கின்றதென்று தவளைகள் புகழ்வனபோல் கத்தலாயின]

தேரைகள்செய்வது ஒன்றல; நடங்கண்டுவியக்கும், மற்று, கோசலதேசத்தின் பொலிவையும் அமைதியையும், நாடாவளம் நல்குகின்ற நீர்மையையும் பகருமிப்புலவர்,

சேலுண்ட வொண்க ணாரிற்
 றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
 வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி
 கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
 தேரைதா லாட்டும் பண்ணை.

[பண்ணைகளில், சிவந்த கால்களையுடைய பெண் அன்னங்கள், தமது குஞ்சுகளைப் பெருமை வாய்ந்த தாமரைகளுக்கிடையே படுக்கவிட்டுத்தாம், சேல்மீன் ஒத்த கண்களையுடைய மாதர்களைப்போல் அழகாக நடந்து திரிய அங்குச் சேறுபட்ட காலோடு படிந்த எருமைகள் வீட்டிலிருக்கின்ற கன்றுகளை நினைக்க அதனால் மடியிலிருந்து அவிழும் பாலை அருந்தியும், பச்சைத் தேரைகள் கூவுகின்ற ஒலியே தமக்குத் தாலாட்டாகவும், அக்குஞ்சுகள் துயில்கொள்ளலாகின்றன.]

எனக் காட்டும் செவ்வியால், மதியிலா முழுமூடமெனப் பேர்படைத்த அம்மண்டூகமும் புலமையின் கண்களுக்கு நயக்கவல்ல பொருளாகித் தோன்றுகின்ற நீர்மை தெரியவருகின்றது.

ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

[22-வது பக்கத் தொடர்ச்சி]

I. ஜான் அரசர்

அங்கம்:—III களம்:—3

இடம்:—பிரெஞ்சு நாடு

[முரச முழக்கம். வீரர் இங்குமங்கும் ஓடுதல். சிறைப்பட்ட ஆர்தரும், அரசனும், ஹூபர்ட்டும் அரசனது தாயாகிய எலினரும் முன்வருதல்.]

பிரெஞ்சு இளவரசனுன லூயி என்பவனுக்கும், ஜானின் உடன்பிறந்தாள் மகளாகிய பிளான்ச் என்பவளுக்கும் திருமணம் முடிய, அவ்வதுவை முற்றுமுன்னர், சீதாராமர் முன் பரசுராமன்போன்று அம்மணமக்களுள்ளிட்ட அரசர்முன் போப்பினால் அனுப்பப்பட்ட பாண்டல்ப் தோன்றினான். அவனைத் தொழுதேற்றுக் கொள்ளாத ஜானுக்கும் மற்றைய அரசர்களுக்கும் உடனே போர் மூண்டது. அப்போரில் வெற்றி பெற்றவன் ஜான் என்றுரைத்தோம். தனது பிள்ளையின் பொருட்டு அரண்மனையையும் பல்வகைப் போகங்களையும் துறந்து போர்க்களமுற்ற கான்ஸ்ட்டன்ஸும், சமரின் குழப்பத்தினிடையே தன் மகனை விட்டுப் பிரியவே சிறுவனான ஆர்தரும் ஜானின்கைகளிற் சிக்கினான். பின்வரும்பாகம், அவ்வாறு தன்வசமாகிய சிறுபிள்ளையை, அரசன் ஏவலாளனிடம் ஒப்புவித்து அவனுக்கிடுங் கொடிய கட்டளையைக் காட்டுவது. பேய்த்தன்மைகொண்டவனும்கொலைபாதகத்துக்கஞ்சுவதியல்பு. இங்கு அரசன் தன்கொடிய எண்ணத்தை வெளிப்படுத்துவதற்குஅஞ்சுவதும், அவ்வச்சத்தால் அவன்மொழிகள் வாய்விட்டெழாமல் தயங்குவதும் நோக்கத் தக்கன:—

ஜான் அரசன்:—(தன் தாயைப் பார்த்து) அஃதவ்வாறேயாகுக; தாங்கள் வலிய படையாற் காக்கப்பட்டுப் பின்தங்குவீர்[1]. (ஆர்தரைப் பார்த்து) தம்பி! வருந்தற்க! உன் பாட்டிக்கு உன்பால் அன்பு உளது; உன் சிற்றப்பனும் உன் தந்தையேபோல் உனக்கு அருமையாயிருப்பார்.

ஆர்தர்:—ஐயோ! இது[2] என் தாயைத் துயரா லிறக்கச் செய்யுமே.

எலினர்:—சிறிய உறவின[3]! இங்குவா. நான் சொல்வதொன்று கேள்.

[தனியே அழைத்துச் செல்கிறாள்.]

ஜான்:—இங்கு வா ஹூபர்ட்: ஓ! என் னுயர்குல ஹூபர்ட்[4]! உனக்கு யாம் [5]மிகவுங் கடமைப்பட்டுள்ளோம். இந்தத் தசைச் சுவர்க்குள்ளே யோர் ஆன்மா பெரும் பொருளையுதவிக் கடன்படுத்தியவனாய் உன்னைக் கருதுகின்றது. அவ்வுயிர் நீ காட்டு மன்பை யனுகூலத்துடன்[1] திருப்பித் தரும். மேலும் நல்லவென் னண்ப! நீ பரிந்துரைத்த ஆணை, இவ்வுள்ளத்தி லன்புடன் பாராட்டப்பட்டு உறைகின்றது. உன் கையைத் தா. ஒன்றுரைக்க விருந்தேன்—மற்று, அதனை நல்லதோரமயத்தோடு பொருந்தவைப்பேன்[2]. கடவுள்மீதாணை, ஹூபர்ட்! நானுன்னிடம் கொண்டுள்ள நன்மதிப்புஇவ்வளவினதென்றுரைக்கவும் நாணுகின்றதென் னுள்ளம்.

ஹூபர்ட்:—அரச சமுகத்திற்கு நான் மிகவுங் கடப்பாடுடையேன்[3].

ஜான்:—நல்ல நண்ப! நீ யவ்வாறுரைப்பதற் கின்னுங் காரணமெழவில்லை[4]. ஆயினும் விரைவில்அதுவாய்க்கும். காலமென்ப தெவ்வளவு மெல்ல நகர்ந்தாலும், நானுனக்குக் கைம்மாறு செய்யு மமயம் வந்தேதீரும்[5]. ஒன்றுரைக்க விருந்தேன்—அது போகட்டும். கதிரவன் விண்ணி லுறைகின்றான். மண்ணிலுறு மின்பங்கள் புடைசூழ விறுமாந்த பகற்காலமும், ஆடலில் அழுந்திக் கேளிதி[6] மிக்கு இருத்தலால் எனக்குச் சேவை தரவில்லை[7]. நள்ளிருள் மணி, தன் னிரும்பினாலியன்ற நாவும் வெண்கல வாயுங் கொண்டு, உறங்கும் இரவின் காதில் ஒரு மணி யடிப்பின், ([8]) நாம் நிற்குமிட மிடுகாடாயும், நீ பலர்செய் துன்பத்தா லுளைபட்டு மிருப்பின்,

---

(1) பின்தங்குவீர் - பிரெஞ்சுநாட்டில் இருப்பீர். தான் வெற்றி பெற்றபின் பிரெஞ்சு நாட்டைக் காக்கத் தன் தாயையே நியமித்துவிட்டு, ஜான் அரசன் இங்கிலாந்திற்குச் சென்றான். அவளும் உயிரோ டிருந்தவரையில் அந்நாட்டைக் காப்பாற்றினாள்.

(2) இது - தான் சிறைப்பட்டது.

(3) வயதாலும் உருவத்தாலும் சிறியவன். அவள் காட்டிய உறவும் சிறியதே.

(4) ஆங்கில மொழி gentle என்பது. அது அமைதியைக் குறிக்கும். ஆயினும் ஜானுக்கு சாந்தமுடையவனால் பயனில்லை. ஆகையால் அதன் இன்னொரு பொருளாகிய, உயர்குலத்தைச் சார்ந்தவன் அல்லது உயர்குல உதிரம் ஓடப்பெற்றவன் என்பதையே இங்கே கொண்டோம். அரசன் பணியாளனை நோக்கி, நீ உயர்குலத்திற் சேர்ந்தவன் என்பது உச்சத்திற் பாதுகையாம்.

(5) தனித் தன்மைப்பன்மை.

---

(1) அனுகூலத்துடன் - வட்டியோடு; நீ எதிர்பாராத தன்மையோடு.

(2) வேறோர் சமயம் பார்த்துச் சொல்லுகிறேன். இவ்வரியில் வெவ்வேறு பாடபேதம் உண்டு.

(3) நீர் கொண்டுள்ள நன்மதிப்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

(4) நீ நன்றி காட்டும்படி நான் உனக்குஇன்னும் ஒன்றும் செய்துவிடவில்லை.

(5) உனக்கு நான் நன்மைசெய்யும் காலம் இன்னதெனக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அது வரவொட்டாமல், எனக்குப் பகையாகக் காலம் வேண்டுமென்றே மெல்ல மெல்ல நடந்தாலும் குறிப்பிட்ட அக்காலம் எப்படியும் வந்துசேரும்.

(6) கேளிதி - விளையாட்டு.

(7) பகற்காலம் ஆடலும் பாடலுங்கொண்டு விளையாட்டு மிகுந்திருத்தலால் அதன்முன் என் எண்ணத்தைச் சொல்ல எனக்கு மனமில்லை. இராக்காலமே என் எண்ணத்தை வெளியிட ஏற்ற சமயம்.

(8) இவ்விடம் பல பாடபேதங்கள் உண்டு. அவற்றில்—அடித்தே நின்றால் (அடித்துக்கொண்டே இருந்தால்) என்பதும், ஒரு மணி அடித்தால் என்பதும் உரைகாரரால் கையாளப்பட்டு வருகின்றன. நள்ளிருள் மணி அடித்துக்கொண்டே இருந்தால் என்பதற்குப் பன்னிரண்டு மணி அடிக்க, என்பது பொருள். இரவில் எவரும் அயர்ந்துறங்குகையில் பன்னிரண்டடிப்பது, கேட்போர் மனதில் அச்சத்தை உண்டாக்கும். ஒரு மணி அடிப்பது நடுநிசியில் அன்று என்பது சிலருடைய வாதம். ஆயினும் எங்கும் அமைதியாய் இருக்கும் நள்ளிருளில் ஒன்றடிப்பதும் கேட்பவர் மனத்தைத் திடுக்கிடச் செய்யும். இவ்விரு சமயமும் ஜான் சொல்ல வெண்ணும் காரியத்திற்கு ஏற்றவை.

(1) அல்லது நயமற்ற துயர் உனது உதிரத்தைப் பொங்கவைத்து அதை உறையச்செய்து பாரமாக்கின், (2)அஃதவ்வாறாகாவிடின், அக் குருதி இரத்தக் குழாய்களில் மேலும்கீழுமா யோடி, மதியீன நகைப்பை மனிதர் கண்களிற் றெரிவித்து, அவர் கதுப்பை வீண் மகிழ்ச்சியாற் பூரிப்பிக்கும்.—இது என் நோக்கத்திற்கு மாறாய், வெறுக்கத்தக்கதாயுள்ளது; அல்லது நீ கண்கள் இன்றியே என்னை நோக்கவும், காதுகளின்றியே நான் உரைப்பதைக் கேட்கவும், நாவில்லாமலே நவிலவும் கூடுமானால்—இன்னணம் கண், காது, மொழிகளின் தீயொலி ஆகிய இவைகளொழிய இருந்து மனோபாவத்தினால் எனக்கு மாறுத்தரம் புகலக்கூடிய நிலைமையில் நிற்பாயாயின், அச்சமயம் அடைகாப்பதொப்ப எச்சரிக்கையொடு கூர்மை நோக்குடைப் பகலிருப்பினும்[3] நான் என தெண்ணங்களை நின் மனத்திடைச் செறிப்பேன். ஆயினும், அந்தோ! அங்ஙனஞ் செய்யேன். எனினும், நின்னிடை அன்புடையேன். உண்மையில், நீயு மென்னிடம் நேயங் கனிந்துடையா யென் றெண்ணுகின்றேன்.

ஹூ:—எனது நேசத்தி னெல்லை சொல்லவோ? நீர் எனக் காணையிட்டுச் செய்யப் பணிப்பதொன் றுளதேல், அத்தொழில் செய்தற்குப் பிரதிபலன் மரணமே யாயினும், இறைவன் திருமுன்ன ருரைக்கின்றேன்—அதை யெவ்வாற்றானுஞ் செய்தே முடிப்பேன்.

ஜான்:—நீ செய்துமுடிப்பாய் என்பதை யான் அறியேனோ? நல்ல ஹூபர்ட்! ஹூபர்ட்! ஹூபர்ட்![4] அதோ சற்றே விலகிநிற்கும் இளஞ்சிறான்மேல் உன் நாட்டத்தைச் செலுத்து. அவன் என் வழியிற் குறுக்கிடும் அரவம். என்னடி மிதிக்கு மிடமெல்லாம் படுத்திருப்பவனவன். யானுரைப்ப தறிகின்றாயோ? நீயே அவன்றன் காப்பாளனா யுள்ளாய்.

ஹூ:—நான் அவனைக் காப்பதும், அரசசமுகத்திற் கயர்வுறா திருக்கும் வழியிலன்றோ?

ஜான்:—மரணம்.

ஹூ:—அரசே? (5)

ஜான்:—சமாதி.

ஹூ:—அவன் பிழையான்.

ஜான்:—போதும். நான் இனிக் களிக்கூத் தாடுவேன் ஹூபர்ட். உன்மீ தன்புகொண்டேன்; நல்லது! நானுனக்குச் செய்யவிருப்பதை வெளியிடேன். ஞாபகம் வை. அம்மா! யான்போய்வருவேன். அப்படைகளைத் தங்களுக் கனுப்புவேன்.

எலினோர்:—எனது ஆசி உனக்கு உரித்தாகுக.

ஜான்:—தம்பி! இங்கிலாந்து செல்வாய்; ஹூபர்ட் உனது பணியாளன். உண்மைப் பணிவொடு தொண்டு புரிவன். கலே நகரம் செல்க.(1)

(யாவரும் போதல்.)

மேல் எடுத்துக் காட்டிய காட்சி, நாடக முள்ளளவும், நூல்களை ஓதுவா ருள்ளஞான்றும், திறமையென்பதை யுலகத்தார் கொண்டாடுங் காலமனைத்தும், புகழுக் குரித்தானதாகும். நாடக மேடையி னலங்காரத்தா லிதன்சிறப்பு மிகாது; நடிப்பின் வேறுபாட்டினாலாவது உலகத்தாரது கொள்கையின் மாறுபாட்டினாலாவது அதனுயர்ச்சி குன்றாது; காலமென்பதன் கதியா லதனழகு குறைவுறாது. தனதாட்சிக் கிடையூறாய் நிற்கின்றவனைத் தொலைத்தாலன்றித் தனக்கமைதியிலதென் றுணர்ந்தபின்னும், தனதெண்ணத்தையறிந்துகொண்டு தன்னேவலுக்கு உடன்பாடுடையவன் ஹூபர்ட்டென் றறிந்தபிறகும், அரசன் வெளிப்படையாய் ஆர்தரைக் கொன்றுவிடு எனப் பணிப்பதற்கஞ்சி, மறைமுகமாய்ப்புகல்வது பிழையிழைப்பார் மனப்பான்மையை விளக்குகின்றதன்றோ? ஜான் அரசன் 'உற்றாரை யெல்லாம் உடன்கொன்று அரசாளப்பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வம்' என்று, அரச செல்வத்தை அவமதிக்கிறவ னல்லன். எங்ஙனமாயினு மெதிர்ப்படு மிடையூறுகளை விலக்கித் தான் உயர்ந்தநிலையை யடையவேண்டுமென்பது அவன் கொள்கை. எனினும், இயற்கையில் கோழைநெஞ்சினனும், உறுதிப்பாடில்லாதவனுமான அன்னான் தான் செய்வதேழ்மைத்தெனத்தெளிந்து மனச்சாக்ஷியினாற்பட்ட வின்னலைக் கவி தெரிவிக்கும் விதம் சாலச் சிறந்தது.

முழுப்பொருளை விளக்காத்தொடர்மொழிகளும், முற்று முடியாதனவும், தொடர்பில்லாதனவு மான வாக்கியங்களும், குறிப்புச் சொற்களும், மறைபொருளனவான சூக்கும வார்த்தைகளும், அரைவாக்கியங்களும், அவன் மனத்திலெழுந்த பெருங் குழப்பத்தைத் தெரிவிக்கும். 'கதிரவன் விண்ணில் உறைகின்றான்' என்று துவக்கும் பாகம் கவியின் கற்பனா சக்தியைக் காட்டுகின்றது.

'நான் சொல்ல வெண்ணியுள்ளதை வெளிப்படுத்தப் பகற்கால மேற்றதன்று; இடம் பொருளேவலும் பொருந்தவேண்டு மன்றோ? வேறு எவரும் நம்மைக் காணாதபடி இருள்மூடிய நள்ளிரவில் நீ இருப்பாயானால், இறந்தோர் பலரின் அருவுரு வுலவும் சுடுமயானத்திடை நின்று, உனக்கு உலகத்தோ ரிழைத்ததீங்குகளை நினைந்து துன்பமுழந்து வஞ்சினமுடிக்க உறுதி

(1) ஆங்கிலத்தில்—துன்பம் உன்னைப் பேய் பிடித்தது போல் பிடித்திருப்பின்—என்று காணப்படுகிறது.

(2) நம்நாட்டில் வாத பித்தசிலேஷ்மங்கள் இரத்தத்தில் கலந்திருக்கின்றனவென்பதுபோல் மேல்நாட்டாரும் துன்பத்தால்குடலிலிருந்து ஆவி எழும்பி இரத்தத்தில் பரவுகிறதென்றும், அதனால்அச்சமயம்அதுபாரமாகி ஓட்டங் குறைந்து மெதுவாய்ச் செல்லுகிறதென்றும் எண்ணினார்கள்.

(3) அடைகாப்பதென்னும் பாடத்தைப் பல உரைகாரர் ஏற்கவில்லை. 'பகல் அடைகாக்குமோ? இரவன்றோ அதைச் செய்வதாய்ச் சொல்லவொண்ணும்? மேலும் மண்ணிலுறை இன்பங்கள் புடைசூழ்ந்து, ஆடலில் அழுந்திக் கிடக்கும் பகல், எக்கமும் வெடுவெடுப்பு முடைய அடைகாத்தலைச் செய்வது ஏற்காதென்கிறார்கள். மற்றுஞ் சிலர் அடைகாப்பதென்பது அக்காலை பக்ஷிகள் எச்சரிக்கையாய், துன்பத்தை விலக்கவிழித்திருப்பதால்அப்பொருள் ஏற்றமுடைத் தென்கிறார்கள்.

(4) மும்முறை கூறியது விரைவுப்பொருளன்று. சித்த மயக்கத்தைத் தெரிவிப்பது. அன்றியும் ஒவ்வொரு முறையும் ஆர்தரை நோக்கி நோக்கிப் பேசியதாகவும் கொள்க.

(5) இங்கே கேள்விக்குறி வேண்டியதில்லை யென்பார் சிலர். ஏனெனில் அரசன் சொல்வதை அறிந்து, அதற்கு உடன்பாடுடையவனாகியே ஹூபர்ட் இருப்பதால் இதில் அவன் திடுக்கிடுவதற் கிடமில்லை என்பர். எனினும் சந்தர்ப்பத்தை நோக்குங்கால், ஆர்தரைக் கடுங்காவலில் வைத்து வெளியேறாமற் செய்வதே ஹூபர்ட்முதலிற்கொண்டஎண்ணமாய்த்தோன்றுகிறது. ஆகவே அரசே! என்ன சொன்னீர்? எனக் கேட்கிறான்.

(1) கலே என்பது பிரெஞ்சு நாட்டில் ஓர் துறைமுகம். அங்கிருந்துதான் இங்கிலாந்துக்குக் கப்பலேறவேணும். இலங்கைக்குச் செல்ல விரும்புவோர் தனுஷ்கோடி போவது போலவாம்.

கொண்டு எனக்கேற்ற மனப்பக்குவ முடையவன் ஆவாயாயின், அதுசமயம் நீ நான் குறிப்பிடுந் தொழிலை ஏற்குமியல்புடையையாவை. உலகச்செய்தியைமறந்து உறங்கும் நள்ளிருளில் சரேலென ஒரு மணி யடிக்க, கொடிய விலங்குகளும் திருடரும் பேயுமே திரியுங் காலமென் றுணர்ந்து திடுக்கிட் டுலக வுணர்ச்சிகொண் டெழுந்திருப்பாயானால் அந்தச் சமயந்தான் நானுன் மனத்திலென் னெண்ணங்களைக் கொட்டுங் காலம்." எனப்பகரும் இதனினும் அருமைபெறு பாகம் நூல்களிற் காண்பதரிது. ஹூபர்ட்டை மும்முறை ஈனசுரத்தோடுவிளிப்பதும், அவன்நாட்டத்தைஆர்தர்மேலேவுவதும், தான் அவனை நோக்குவதும், தாமதிப்புத் திக்கும் தீர்மானித்த தீயதொழிற்கு மேற்றனவே.

நானென் றுரைக்க விருந்தேன், நானென் றுரைக்க விருந்தே னென்று சொல்லி, உரைக்கநினைத்த தின்னதென உணர்த்தாததும், சுடலையில் நின்று ஒருவித மனப்பக்குவங் கொண்டிருப்பின், உன் மனத்திடைப்பல விடயங்களைச் செறிப்பேனெனப்புகன்று, பின்னர் ஆயினுமங்ஙனஞ் செய்யேனென்பதும், தீயவெண்ணத்தா லலைப்புண்ட அவன் மனம், கொடும் புயலாற் கலக்கப்பட்ட கடல்போன்று, பொங்கியும், குடைந்தும், நுரைத்தும் ஆரவாரித்ததைக் காட்டி நிற்கின்றன. இறுதியாய்க் கொல்லென்று சொல்லுமிடத்திலுங்கூட "பாம்பவ னென்வழியிற் குறுக்கிடுகின்றான்: நீயென் னெண்ணந் தெரிந்துகொண்டாயோ?" என வட்டமிட் டுரைத்துழலு மிவன்றன் மனப்பான்மையை நோக்கில், அது தீயின்பாங்கர்ச் சிதறிக் கிடக்கும் மணங்கொண்ட பண்டமொன்றை யடைய அவாக்கொண்ட ஈ, அதன்மேற் றங்கவஞ்சி வட்டமிட்டு இட்டுப் பறப்பதை யொக்கும். மரணம், சமாதி யென்னும் ஒருமொழி மாறுத்தரங்களி லடக்கிய சினமும் வெறுப்பும், 'அவன் பிழையான்' என்றபின், போதும் களிக்கூத்தாடுவேன், என்னுமிடத்தில் வெளிப்படுத்திய மகிழ்ச்சியும், ஷேக்ஸ்பியர், இவைகளைப் பேசினவர் மனத்திடைநின்று அவர்தம் எண்ணங்களை யுணர்ந்து வரைந்தனரெனக் குறிப்பிடுகின்றன.

உபநிடத முனிவன்

[28-வது பக்கத் தொடர்ச்சி]

பாரதத்தில் முதற் கிளைக்கதை உதங்கமுனி கதை போலும். அதில் பௌஷ்ய மகாராஜன் பிராமணனது குணத்தை மிக அழகாகக் குறிப்பிடுகின்றான். 'அந்தணனுக்கு எளிதில் கோபம் பொங்கி எளிதில் அணைவது வழக்கம். ஆனால், க்ஷத்திரியன் கொண்ட கோபத்தை எளிதில் மாற்றமுடியாது' என்பான். இது யாவரும்ஒவ்வக்கூடியதேயாகும்; ஏனெனின் அதற்கு உதாரணங்கள்பல அளவில்லாதபடி மலிந்துகிடக்கின்றன. துரோணனிடம் அத்தகைய குணங்கள் நன்கு விளங்கக் காணலாம். பதினான்காம்போரில், சயத்திரதனைக் காக்க, விமானத் தமரரும் அதிசயிக்கும்படி, மிகவிராகவியூகமணிந்து மிகுந்தகோபத்துடன்நின்ற துரோணன், அருச்சுனன் தன்முன் போராற்றாமல், 'ஐய, நின்னோ டமர் திளைத்தல் அமரருக்கும் அரிது' என்று முறுவலித்தபோது, கொதித்துவந்த குருவும் தணிவடைந்து போயினான்.

எவ்வளவு உரைத்த பின்பும், துரோணனது சிறந்த குணத்தைச் சொல்லவேண்டுமானால் அது தியாகமேயாகும். நாட்டின் உரிமையுடையோர்க்கு ஐந்து இல்லமும் கொடாத அநியாயத்தைத் தீர்க்கவேண்டி, மெய் விளங்கவரு குருநிலத்திடைச் சேர்ந்தக்கால், 'நீயிருக்க யான் வெற்றிகொள்வ தெப்படி?' என்று யுதிட்டிரன் வீடுமனைவினவ, மற்றவன், 'பத்துநாள் வரையில் நான் படேன். அதன்பின் சிகண்டியால் நான் பிராணனையிழப்பேன்' என்று முன்வரலாறும் பின் வரலாறும் அனுசரித்து எடுத்துக்கூறினான். இவ்வண்ணமே யுதிட்டிரன் "நீ யிருக்க யான் வெற்றிகொள்வதெப்படி," எனத் துரோணனை வினவ மற்றவன், 'என் தனயன் பட்டான் என்று யுதிட்டிரன் கூறினவுடன் நான் சிலை தொடேன்' என்று எளிதில் இனிமையாக மொழிந்தான். மனிதசௌலப்யத்தில் சிறந்தது இதுவென்று கூறவும் வேண்டுமோ? இனித் துரோணன் கூறியவற்றை ஆராய்வோம். தருமன் சத்தியவானாதலின் அவன் அசுவத்தாமன் பட்டானெனின் அது உண்மையென்றும், அப்படி அவனிறந்தால் தானும் மகவாஞ்சையால் இறக்கவேண்டுமென்றும் துரோணன் கூறினானில்லை. அப்படித் தன் புத்திரன் இறந்தான் என்பதைக் கேட்டவுடன், உண்மைச் சோகமுள்ளவன் அதனை உடனே நம்புவ தியற்கையன்று. அப்படி உண்மையென்று கண்டறிந்தாலும், அருச்சுனன் புத்திரவாஞ்சையால் எரியிடை வீழ யத்தனித்தது போல் இவனும் வீழானோ? மேலும் அசுவத்தாமன் சிரஞ்சீவியாதலால் சிவபிரான் வாக்குப் பொய்க்காது என்றறியானோ? ஆதலின் துரோணன் கருத்தென்னவெனில், தருமன் சிறந்த அறமாண்பினன் ஆதலின், அவன் பொய்புகன்றால், அச்சந்தர்ப்பம் மெய்விளங்கவரு குருநிலத்திடை (தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே) பொய் விளங்குமாதலால், அப்போது சத்தியத்தைக் (அறத்தை) காப்பாற்றத் தான் உயிர்விடுவதே பேரறமாகுமென்றுகொண்டசீரிய கொள்கையாகும். துரோணனுக்கு இரண்டுஅறங்கள் உண்டு. ஒன்று இவ்வுலகக்கடன், துரியோதனனுக்குச் செஞ்சோற்றுக் கடன் கழிப்பது. மற்றொன்று, 'உலகம் அநித்யம்; ஸத்யம் பரம்' என்னும் சீரிய கொள்கையாகும். இவ்விரண்டு கொள்கைகளுக்கும் தன் வாழ்க்கையை உதாரணமாய்க் காட்டினான் துரோணன்.

மேற் கூறியதைப் பின்னும் விளக்குவோம். கடைநாள் போரில் அண்ட முடியாத அனலைப்போல் துரோணன் போர்செய் சமயத்தில், பல இருடிகள் அவனையண்மித் தத்துவம்கூறிச் 'சிலை தொடேல்' என்றுகூறிய போது துரோணன் சற்று வாளா விருந்தானென்றும் பிறகு இது கண்ணன் மாயமோ என்று மறுபடியும் போர்துவக்கினான்என்றும் கூறியுள்ளது. துரோணன் வாளாவிருந்தது அவர்கள் கூற்றின் உண்மையை ஒத்துக்கொண்டதாகும். ஆனால் அவனுக்கு வேறு ஒரு கடமையும் உளதாதலாலும், அதைப் பேரறத்திற்காகக் கைவிடுவ தெப்பொழுதென்பதைத் தான் ஆய்ந்து நிச்சயித்துவிட்டதாலும், அவ்வுரை மாறாது. தருமசொரூபியாகிய யுதிட்டிரன் பொய்புகலும்வரையில் காத்திருந்த சிலையாசிரியனை எவ்வாறு போற்றுவது?

இச் சீரிய தத்துவத்தையுடைய துரோணனை ஆசிரியர் அடிக்கடி ‘உபநிடத விற்கைமுனிவன்’ என்கிறார். ‘ஸத்யமே பரம்; எது பரமானதோ அதுவே ஸத்யம்’ என்றன்றோ மறை நவில்கிறது.

முக்கியமாக, துரோணன்கதை பதினைந்தாம் நூற்றாண்டில் இராசபுதனத்தில் தோன்றியவொரு அந்தணன் கதையை நினைப்பூட்டுகின்றது. அக்பரை யெதிர்த்த மஹாராண பிரதாப் சிங்கின் கதை அநேகருக்குத் தெரிந்திருக்கும். அவனது சிறுவயதில் அவனுக்கும் அவனது தம்பி ஸோஹத் என்பவனுக்கும் இடையில் பொறாமைச் செடியைச் சபையோர்கள் வளர்த்து வைத்தார்கள். மோடா (பருத்த) ராஜாவான உதயசிங்கும்தனது தனயர்களைக்கவனியாது மாடுபோல்காலங்கழித்துவந்தான். சபையோரின்முயற்சியால்போரரங்கம் ஏற்பட்டு ஸோஹத்தும்பிரதாபும் வாள்யுத்தம் செய்ய முனைந்தனர். அச்சண்டையைத்தடுக்கமுயன்ற பிராமணனது கூக்குரல்களெல்லாம் வீணாயின. கடைசியில் அவன், இருவரும் சண்டை செய்தபோது இடையில் புகுந்து கத்திகளுக் கிரையாகி மாண்டான். பிறகுஸோஹத் அவ்விடம்விட்டு நாடுகரந்தோடினான். அக்பர் சக்கிரவர்த்தி இராஜபுதனத்தின்மீது படையெடுத்தபோது ஸோஹத்தும் முகலாய சேனையிலிருந்தான். ஆலதிகட் என்னும் கடும்போரில் பிரதாபன் சேனையெல்லாம் மாண்டு, விரோதிகளால் துரத்தப்பட்டு, உடலெல்லாம் இரத்தம் வெளிப்படத் தனியே ஓடுகையில், ஸோஹத்தும் பின்சென்று துரத்துபவரில் ஒவ்வொருவராகக் கொலைசெய்து, பிரதாப்பின் குதிரை ஆயாசத்தால் மாண்டுவிழ அவன் ஒன்றும் தோன்றாமல் திரும்பியவுடன் அவன் கைகளிற்சேர்ந்து ஒருநாழிகை நேரம் இருவரும் அணைப்பினின்றும் பிரியவில்லையென்பது சரித்திரம்.

துரோணன் சிலைத்தானம் வழங்கிய பெரும் வில்லாளியென்பதில்ஐயமில்லை; ஆயினும் போரில் இவன் தோல்வியுறுவது சிந்திக்கத்தக்கது. அருச்சுனனும், அபிமனும் துரோணனை வென்றது அவர்கள் அத்திரபலத்தாலென்று கூறினால் கூறுக. ஆயினும் எங்கும் தோலாதவென்றி விசயனும், துரோணன்முன் போராற்ற இயலாது நின்றனன் என்பதை நோக்கவேண்டும். அச்செயலோன் தருமனிடம் தோல்வியுறுவது எங்ஙனம் அமையும்! தருமசொருபியாகிய அவனைப் போரில் எதிர்ப்பது சிலையாசிரியனுக்கு அச்சந்தருவதென்னலாம். ஆனால் சாத்தகியிடமும், வீமனிடமும் தோல்வி யுறுகிறானே யென்னின்; பொதுவாக இவனுக்குப் போரில் பகையில்லை யென்பதும் செஞ்சோற்றுக் கடனாற்றத் ‘தாமரையிலையில் தண்ணீர்’ போல் மனம் பற்றாது அதர்மத்தின்பக்கலில் போர்புரிகின்றானென்னலாம். ஆனால் சில சமயத்தில் இவன் சந்தர்ப்பங்களால் தனது கொள்கையை மறந்து யுத்தம் புரிகிறான். பன்னிரண்டாம் நாளிரவு கர்ணன் வசைமொழியால் வெகுண்ட துரோணன் மறுநாள்,

பஞ்சவர் கோமுதல் வந்தனை வன்பொடு
படைபொர வெண்ணினனே

என்று அவனுக்குவிளைந்த உண்மைச் சினத்தைக் கவிஞர் வெளியிடுகிறார். ஆனால் அந்தணனுக்குக் கோபம் எளிதில் பொங்கி எளிதில் அணையுமாதலின், திட்டத்துய்மனை ஓரத்திரமேனும் கோக்க முடியாமற் செய்தவுடன் துரோணன் கோபமாறினான். ஆனால் இவ்வகையினால் சில விபரீதங்களும் விளைகின்றன வென்பதை நாம் நோக்கவேண்டும். அன்றையதினமே அபிமனை எல்லோரும் ஒருங்குகூடி எதிர்க்கலானபோது துரோணன் யுத்த உணர்ச்சியுற்று வெகு காரியமாய் அவன் கரத்தை அறுத்தான். உடனே ‘இந்திய இரக்க உணர்ச்சியை”க் காட்டுவான் போன்று அவனைக் கொல்லாமல் கையறுந்தபடியேவிட்டுவிட்டு ஓடுகிறான். (இந்திய இரக்க உணர்ச்சியென்றால் மேனாட்டாரைப் போல் பிரிவு வருத்தம் நீக்கவேண்டி, அபிமானமாக வளர்த்த நாயைச் சுட்டுக்கொல்வதுபோலன்றி, நோயுற்றுத் தேராத பசுவைக் கொல்லாமல் வைத்திருப்பதென்று ஆங்கிலேயர் கூறுவர்.) மறுபடியும் சயத்திரதனைத்தான் காப்பதாக அவ்வளவு தூரம் உறுதி கூறிவிட்டு, மறுநாள் அருச்சுனன் முறுவலித்ததும் அவனை வியூகத்தில் விட்டது, ‘பின்புத்திக்காரன் இரு பிறப்பாளன்’ என்பதை ஒரு சிறிது மெய்ப்பிக்குமே.

குற்றங்குறைக ளிருந்தாலும், பொதுவாகச் சீரிய வாழ்க்கை வாழ்ந்தவன் துரோணன் என்பதில் ஐயமில்லை. மேலும் இவன் பண்பும் எளிதன்றோ? அதுவுமல்லாமல் வீடுமனையும், கன்னனையும்போல் இவன் தீர்க்கவிசாரமில்லாதவன். ஆதலின்என்றும்சந்தோஷமுடையவன். போர்முனையில் ஓரவிடத்துக் கோபம் கொள்வதன்றி வேறு யாவரேனும் தூஷித்தபோது இவனுக்கு க்ஷத்திரியனைப்போல் தீராக்கோபம் விளைந்ததுகிடையாது. திட்டத்துய்மன் தனக்கு மறலியாவானென்றறிந்தும் அவனுக்குக் கல்விதானம் அளித்தான். போரில் அவனைக் கொல்லச் சமயம் அகப்பட்டும் அவனைக் கொன்றானில்லை. இப்படித் தனது உபநிடத ஞானத்தினால் உலகக் கவலையெல்லாம் திரஸ்கரித்து முறுவல்முகத்துடன் விளங்கிய துரோணன், சற்று நேரத்திற்குமுன் நம்முன் நின்றதுபோ லல்லாமல், நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் வேதவியாச பகவானால் சிருட்டிக்கப்பட்ட ஒரு கதாபாத்திரமாகக் காணவில்லை. மனிதச் சிருட்டியாற்றலின் மாண்புதான் என்னே!

அருமறைக் கயனை யொப்பான்
அடற்சிலைக் கரனை யொப்பான்
திருவருட் கரியை யொப்பான்
திருத்தகு வீடு சேர்ந்தான்.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[23-வது பக்கத் தொடர்ச்சி]

இலங்கையிலிருந்து தெற்காய்ச் சூரபன்மன் அரசு செய்திருந்த இடமாகிய மகேந்திராபுரிக்குப் போகக் குறுகிய நிலவழி (Isthmas) இருந்ததாகவும், வீரவாகு இலங்கையைக் கடலில் வீழ்த்திய பின்னர் அவ்வழியே மகேந்திராபுரிக்குச் சென்றதாகவும் † கந்தபுராணம் கூறுகின்றது. இராமாயணத்திலோ, இலங்கைக்குத் தெற்கில் அதற்குச் சம்பந்தமான பூமி அல்லது வேறு தீவு இருந்ததாகக் காணப்படவில்லை.

† நின்றிப் பாற்பட னீர்மை யன்றரோ
தென்றிக் கின்வழி சென்று நாடுவன்
என்றுட் கொண்டவ னீங்கி யேகினான்
குன்றிற் றோன்மிடல் கொண்ட தோளினான்
கந்தபுராணம் - மகேந்திரஞ்செல் படலம் 28.

ஆகையால் மகேந்திர நாடு கடலில் இராவணன் காலத்திற்கு முன்னரே மறைந்ததென்று நாம் எண்ணல் வேண்டும். பாதாளலங்கை யென்னப்படும் தீவில் அரக்கர்கள் இருந்ததாகக் கூறி, அவ்வசுரர் வேந்தனான மயில் இராவணன் (அல்லது அகிராவணன் மகிராவணன்) கதைகளாகி இராமாயணத்திற்குச் சம்பந்தமாய் ஏற்பட்டவைகளை உற்று நோக்கின் இக்கதைகளும் கடல்கொண்ட மகேந்திரபுரத்தைப் பின்பற்றி யுண்டானவைபோல் விளங்கும்.

மற்றும், வீரமகேந்திரபுரியில் சூரபன்மன் அரசாண்டபோது நமதுஇந்தியாவின் தென்பாகமானது சம்புத்தீவு அல்லதுநாவலந்தீவு என்னும் ஒருபெரிய தீவாகி இருந்ததாகவும், அதற்கு வடக்கில் ஒருகடல் இருந்ததாகவும், அவ் வடசமுத்திரத்தில் சூரபன்மன் பிரதிநிதிகளால் ஆசுரம்*என்னும் தீவில் அரசு செலுத்தி வந்தானென்றும், சம்புத்தீவில் ஏமகூடமலையினருகில் மாயாபுரியில், அவன் தம்பி தாருகாசுரன் அரசாண்டானென்றும் கந்தபுராணம் கூறும். இவ்வாறு பலதீவுகளில்† சூரபன்மனுக்குப் பிரதிநிதிகளாய் அரக்கர்கள் ஏற்படுத்தப்பட்டனரென்பதும் விளங்குகின்றது.

இவற்றை யெல்லாம் நோக்குங்காலைத் தமிழ்நாட்டின்நாகரிகம், கடல்கொண்டதென்கண்டத்தில் பரவியதுகிரதயுகவாரம்பமென்பதும், அக்காலத்திய தமிழ் வேந்தர் வடதிசையில் குடியேற்றத்தை நோக்கியிருந்தனரென்பதும் விளங்கும். அசுரர்கள்தேவர்களுக்குத் தாங்கமாட்டாத் துன்பந் தந்தனரென்னுங் காரணத்தால் கந்தவேள் சூரன்மீது போர்தொடங்கினதாகக் கந்தபுராணத்தில் காணப்படுகின்றதன்றி, மனிதர்களுக்குத் துன்பந் தந்ததாக அங்குக் கூறவில்லை. இவற்றையெல்லாங் கவனிப்போமாயின் தேவர்களென்று அந்தயுகத்தில் கூறப்பட்டவர், சன்மார்க்க நெறியைக் கடைபிடித் தொழுகிய மனிதரே யென்றும், அசுரரெனப்பட்டவர் துன்மார்க்கராய் அவருக்குத் துன்பம் விளைவித்த மனிதர்களே யென்றும் எண்ணலாம். இக்காலத்தில் இந்துமகா சமுத்திரத் தீவுகளில் மனிதரைத்தின்கிற மனிதர்கள்இருக்கின்றனர். இவர்கள் கோர ரூபிகளாயும் கொடிய வன்மையுடையோராயுமிருப்பதால், அக்காலத்திய அரக்கர்கள் இவர்களின் முன்னோர்களா யிருக்கலா மென்று அநுமானிப்பது விபரீத மன்று. சூரபன்மன் தம்பியாகிய தாருகனைக் குறித்துக் கூறுங்கால் கச்சியப்ப சிவாசாரியார்“குறவர் போற்றிடுந் தாரகன்”என்றதை அசுரகாண்டம் நகர்செய்படலம் 27-வது செய்யுளிற் காண்க. “குறவர்” என்பதற்கு “அசுரர்” என்னும் பொருள் வெளிப்படை.

குறவர் என்பவர் குறிஞ்சி நிலத்தின் புராதன குடிகள். இன்னும் அந் நாமத்தை வகித்துள்ளார். அக்குறவரால் வளர்க்கப்பட்ட வள்ளியம்மையை, முருகக் கடவுள் கந்தருவமணம் புணர்ந்தனர். கந்தர்வமணம் தமிழர் பண்டைக் காலத்தில் களவியல்முறையில் செய்யப்பட்டதென்ன நம் தமிழ்ப் பொருளிலக்கணத்தால் அறிகின்றோம். குறவரைத் தமிழ்நாட்டுக் குறிஞ்சி மக்களாக் கொள்ளலாயினர். அவர் பாஷையும் தமிழேயென்றும் நமது இலக்கியம் கூறும். இமயமலைபருகிலும் தமிழ்ப்பாஷையே கிருதயுகத்தில் பரவியிருந்தது. அயோத்தியில் இராமன்காலத்தில் உலக வழக்கத்தில் கோசலை முதலிய தேசங்களில் வழங்கியதும் தமிழே என்பது வால்மீகியால் ஒருவாறு உணரலாம். சுந்தரகாண்டத்தில் 30-வது சர்க்கத்தில், அநுமான் சீதையிடத்தில் பேச நிச்சயித்தசெய்தி பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது:—

“வானரனாகிய நான் அதிசூக்ஷ்ம ரூபத்துடன் மனுஷ்ய வார்த்தையால் பேசலாமா? அல்லது வியாகரண இலட்சணங்கள் பொருந்திய சமஸ்கிருத பாஷையில் பேசலாமா? பிராமணனைப்போல் சமஸ்கிருத வார்த்தையால் பேசினால் குரங்குக்குப் பிறரோடு சம்ஸ்கிருத பாஷையில் பேசிப் பழக்கம் எங்கே? ஆகையால் இராவணன் நம்மை மோசஞ்செய்ய இந்த ரூபத்துடன் வந்திருக்கிறான், என்று சீதை பயப்படுவாள். சிரேஷ்டமான அர்த்தங்களடங்கிய மனுஷ்ய பாஷையிலேயே இவளுடன் பேசுவது நலம். கோசல தேசத்திலுள்ளவர்கள் பேசும் பாஷையிலேயே இவளுடன் பேசவேண்டும்”

என்று ஆஞ்சநேயன் எண்ணியதாக விளக்கப்பட்டிருக்கின்றது. எனவே இராவணன்காலத்தில் கற்றோர் மாத்திரம் பேசுவது வடமொழியாயும் இந்திய தேசமுழுவதும் யாவரும் பேசுவது தமிழ்மொழியாயுமிருந்ததென்ன நாம் அனுமானிக்கலாம். பல்லாரி ஜில்லாவிற்கு அருகிலுள்ள கிஷ்கிந்தையில் வழங்கிய பாஷையே கோசலநாட்டில் வழங்கியதெனின் இராமாயண காலத்திற்கு முன்னரே தமிழ்மொழி எங்கும் பரவியிருந்ததென்பது திண்ணம்.

சூரபன்மன் வீரமகேந்திரத்தில் அரசாண்டபோது அவ்விடத்திலும் தமிழ்மொழியாகிய மனுஷ பாஷையே வழங்கியதென்றும், அங்குச்சிறைப்பட்டிருந்த இந்திரகுமாரனும் நாடகத் தமிழுக்கு மூலாதார புருடனுமான சயந்தனும் மற்றத் தேவர்களும் தமிழிலேயே வார்த்தையாடினரென்பதும் நிச்சயம். இன்றேல் வேறு பாஷையில் பேசினரென்பது கூறப்பட்டிருக்கும். வீரவாகு இலங்கையிலும் வீரமகேந்திரபுரியிலும் பேசியது ஒரு பாஷையேயாம். குமரக் கடவுளும் தமிழ் நாட்டினராகவே காணப்படுகின்றார். சூரபன்மனைச் சம்மரிக்கு முன்னர்த் தமிழ்நாட்டுப் பதினோராடலில் ஒன்றாகிய குடையென்னும் ஆடல் செய்ததாகப் பண்டைத் தமிழ்நூல்கள் கூறும்:—

“அறுமுகத்தோ னாடல் குடை, மற்றதற்குப்
பெறுமுறுப்பு நான்கா மெனல்”

என்றும்,

* மாண்டகுசீர் கெழுவீர மகேந்திர மிவ்வாறுதவி
யாண்டதுபோ லகன்பரப்பி லாசுரமென் றொருநகர்
நீண்டிடை கடனடுவ ணிருதர்புகழ்ந் திடுமாற்றாற்
காண்டகைய சீயமுகக் காவலற்கு நல்கினனே.

மற்றுளவெம்புணரிதொறும்வயின்வயின்சேர் தீவுதொறுங்
கொற்றமிகுஞ் சூரபன்மன் தலைவுபெருந் தானையெலாஞ்
சுற்றமுடன் மேவுதந்துத் தொன்னகரம் பலவமைத்துக்
கற்றுணருஞ் சிறுவரொடுங் கம்மியன்மீண் டேகினனே.

† நீடு மேரு நெடுவரைத் தென்புடை
நாடு சீர்கெழு நாவலந் தீவினிற்
கூடு கின்றபொற் கூடந் தனக்கொரு
மாடு போந்தனன் மாமயன் றூதையே.

பகரு கின்றவப் பாற்படு மெல்லையிற்
குறவர் போற்றிடுந் தாரகற் காகவே
மகிழ்வி னீரொடு மாயா புரமென
நகர மொன்றை யணிபெற நல்கினான்.

—அசுரகாண்டம் - நகர்செய் படலம். 23-27.

"துடியாடல் வேன்முருக ளுட லதனுக்
கொடியா வுறப்போ ரைந்தாம்"

என்றும், பதினோராடலாவன கூறும் வெண்பாவான
கடையமபி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பஞ்—சுடர்விழியாள்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து

என்றும்,

புரமெரித்தல் சூர்மாத் தனைபடுத்தல் கஞ்ச
னுரனெரித்தல் வாணனை வானுய்த்தல்—பெரிய
வரன்முத லாகவே லன்முதன் மாயோ
னமர்முத லாடிய வாறு

என்றும், மொழிந்திருப்பது காண்க.

ஆகவே, கந்தன் சரிதை, தமிழ் நாட்டுச் சரிதையென்பதும், இலங்கை கந்தமாதனம் மகேந்திரம் இவையாவும் தமிழ்நாட்டு இருதயகண்டமெனவும் தமிழ்ச் சங்கங்களுக்குப் பன்னாள் முன்னரே தமிழ் நாகரிகம் குமரிக்குத் தெற்கில் பரவியிருந்த தென்பதும், ஸ்கந்தப்போரில் இருதிறத்தோரும் தமிழ் மக்களென்பதும் இதில் ஆரிய சம்பந்தம் மிகவும் குறைவென்றும் ஏனைய விஷயங்கள் பலவும் வெளிப்படுகின்றன.

மதுரைக் கோவை

[25-வது பக்கத் தொடர்ச்சி]

போய் பாராட்டல்

பருவத் தளவி லிடுமிந்த்ர சாபமிப்
பாவையிரு
புருவச் சிலைகண்டு நாணியன் றேமுப்
புராதிபரை
வெருவச் சிலைதொட்ட வெள்ளிமன் றுளர்தம்
வெற்பிலென்று
முருவப் பிறந்து மிறந்து மொவ்வாம
[1]லொழிகின்றதே. 29.

இடம்பெற்றுத் [2]தழாஅல்

மல்லற் பழன வயன்மது ரேசர்
வரையணங்கே
வெல்லப் பிறந்தவை வேற்படை யேவிமென்
காவிலின்னம்
புல்லக் கிடைக்குங்கொ லென்றயர் வேனைப்
புகலறநீ
கொல்லத் துணிந்து குறையாவி யுங்கொள்ளை
கொண்டனையே. 30.

கோடியிடம் புகுதல்

கடங்குதிக் குங்களிற் றுர்கடம் பாடவிக்
காவல்கொண்ட
விடங்கொதிக் குங்கண்டர் வண்டமிழ்ச் சாரலில்
வெண்டரள
வடங்கிடக் கும்முலை யார்மட னுணுக்கு
மாதிமைக்கு
மிடங்கொடுப் பாரெவ ரோவுனைப் போல
விளங்கொடியே. 31.

கோடியிடம் புகுதற் கிரங்கல்

பிறைத்தாம நீள்முடி கன்றமெய் வேர்வு
பெருகவன்று
குறைத்தாய வை[யை]க்கு மண்சுமப் பார்சொக்கர்
கூடலிலிக்
கறைத்தாரை வேல்விழி யாலென்னை யாளுங்
கரும்பையின்று
மறைத்தா யிளங்கொடி யேயுனக் கேனிந்த
வன்கண்மையே. 32.

(பிரதி) 1. லொழிக்கின்றதே. 2. தளர்தல்.

கண்டுதைத் திரங்கல்

கொலையிட்ட முத்தலை வேற்சொக்க நாயகர்
கூடல்வெற்பில்
முலையிட்ட முத்த முகிணகை யீர்நும்
முரிபுருவச்
சிலையிட்ட காவலுக் குள்ளே கிடந்து
தெளிவித்தெம்மை
நிலையிட் டவர்தம்மை யோமறைப் பீரென்
னிலையுங்கண்டே. 33.

நீடு நினைந்திரங்கல்

காம்பாடு சோலைக் கடம்பா டவிக்கறைக்
கண்டர்வெற்பி
னும்பா தகமென்செய் தோநெஞ்ச மேநறை
தேக்கெறியுந்
தேம்பா யளக நிழற்கே நிறையைத்
திறைகவர்ந்த
பூம்பாவை நாணுமென் காதலு மாகப்
பொருகின்றதே. 34.

நாள்விட வருந்தல்

வாராசை கொண்ட வனமுலை பாகர்
மதுரைவெற்ப
ராராயும் பேரறி வுக்கடங் காம
லளவிறந்த
பேராசை வெள்ளந் தலைப்படும் போதொரு
பெண்மடனு
ணோரா வெதிர்நிற்கு மோநெஞ்ச மேயென்
னினைவதுவே. 35.

வறிதுநகை தோற்றல்

தலைக்குஞ் செழுங்கொன்றை போதா திளம்பிறைத்
தாமங்கொண்டு
வலைக்குஞ் சடாடவி யார்சொக்க நாதர்
மதுரையன்னார்
இலைக்குந் துடியிடை யார்சிந்து ரானனத்
தின்றவமே
முலைக்குஞ் சிறிய முறுவலென் னுக
முடிவிக்குமே. 36.

முறுவற் குறிப்பறிதல்

கவளக் கடகளிற் றுர்கடம் பாடவிக்
கன்றிளமாம்
பிளவைப் பொருத பிணைவிழி யாரருள்
பெற்றமின்ன
மளவெத் தனையென் றறியவொண் ணுதின்
னமுதரும்புந்
தவளத் திருநகைக் கேயுள தாமொரு
தண்ணளியே. 37.

மருங்கணைதல்

மாகீத வண்டினங் காளுமை பாகர்
வளமதுரைப்
பாகீர் மொழிச்சின் மருங்குகண் டீர்முலைப்
பாரங்கண்டீர்
ஏகீ ரமர்கின்றி லீர்மது வாசைக்கு
மென்னுரைக்கு
மாகீ[3] ருழலுகின் றீரென்ன கேண்மையு
மாவனுமே. 38.

கூடுதலுறுதல்

மடைக்கண் டரளஞ் சொரிவைகை நாடென்ன
வையமொரு
குடைக்கண் டனிபுரப் பார்சொக்க நாயகர்
கூடலன்னார்
கடைக்கண் கருணையுண் டாருமி லாதபொற்
காவுமுண்டு
புடைக்குந் தருண வனமுலை யாமின்று
புல்லுதுமே. 39.

கலந்துழி மகிழ்தல்

கொடும்போர் வரிசிலை யார்கூடல் மால்வரைக்
கொம்பினங்கந்
தொடும்போது கன்று மெனவிருந் தேம்புல்லித்
தோள்குழைவு
படும்போ தெறியும் புளகஞ்சற் றேய
பனிமலர்க்கை
விடும்போ துயிர்விடும் போதுமென் னுக
வியந்தனமே. 40.

நலம்பா ராட்டல்

கண்ணுக் கனங்கன் கரும்பாகி யின்னிசை
காதலித்தாற்
பண்ணுக் கொருவடி வாயுயி ராய்த்தம்
பரப்படங்கா
மண்ணுக் கடங்கு புயத்தார் மதுரை
மதுமலர்ப்பூம்
பெண்ணுக் கருங்கல மாய்நின்ற வாவென்
பெருந்தவமே. 41.

பயந்தோர்ப் பழிச்சல்

மல்லிற் றிகழ்புயத் தார்மது ரேசர்
வரையிலிந்தக்
கொல்லித் தனிபணங் கென்னநிற் பாரைக்
கொழிக்குநறை
யல்லிக் கமலத் திருப்பா னிருக்கு
மளவுமெம்மைப்
புல்லிக் கொளத்தரு வார்வாழி வாழி
புகழொடுமே. 42.

3. லுழலுகின்.

தீராத் தேற்றம்

வாளுற வானகண் ணுப்த்தமி யேன்சொல்லும்
வாய்மையென்னுஞ்
சூளுற வாவ தறிந்திலை யேயலை
தூற்றுகங்கை
யாளுற வாமுடி யாரால வாயிலெ
னுதரவோர்
நாளுற வாகில் வரலெவற் கோபழி
ஞாலத்திலே. 43.

ஏற்புற வணிதல்

துடைத்தார் படைத்தளிப் பார்சொக்கர் தாளைத்
தொழுதுனைமுன்
கிடைத்தா ரமைத்த படியணிந் தேனிரு
கெண்டையங்கட்
கடைத்தாரை கொண்டிது பாரணங் கேயன்று
கைவருந்தப்
படைத்தார் தமக்கும் படைக்கவொண் ணுதென்
படைப்பினையே. 44.

விடுத்தல்

வாவிக் கயலுக ளு[ம்] மது ரேசர்
வரையமுதே
யாவித் துணையென்னு மாயம் புகீரடி
யேனுமது
காவித் துணைவிழி யின்கடைப் பார்வையுங்
கண்டுகண்டு
சேவித் துடன்வர வும்பெற்றி லேன்முன்செய்
தீவினையே. 45.

இன்னங் கூடுங்கொலென வரு[ந்]தல்

வாளக் கிரிபுரப் பார்மது ரேசர்
வரையிலிந்தத்
தோளத் தனையு மிருதன பாரமுந்
தோய்ந்திவர்வந்
தாளத் தவஞ்செய்த நெஞ்சமெஞ் சாதெம்மை
யாளவின்ன
மீளத் தவஞ்செய்த தோதெரி யாது
விதிவசமே. 46.

நீங்கற் கருமைகூறல்

மணக்கும் படிவருங் காளுளங் கூரு
மகிழ்வுஞ்சற்றே
தணக்கும் பொழுது தளர்வுங்கண் டாற்பொற்
றருவைமுட்டி
யணக்குந் தடம்பொழில் சூழால வாயரன்
றுய்ந்துசங்கத்
திணக்குந் தமிழென்ன லாம்வல்லி யாடு
மிளம்பொழிலே. 47.

இடந்தலைப்பாடு முற்றும்.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[29-வது பக்கத் தொடர்ச்சி]

2. ராகம்-ஹரிகாம்போஜி.] [தாளம்-ஆதி.

பல்லவி

விநதாஸுத வாஹனுடை—வெடலெனு காஞ்சீவரதுடு.......................(வி)

அனுபல்லவி

வநஜாஸநாதி ஸுருலு—ஸநகாதி முனுலு கொலுவ..........................(வி)

சரணம்

நெர வைசாகோத்ஸவமுன சததினகரு லுதயிம்சிரோயனி பஸ்சம கோ—
புரத்வாரமுன சராசரமுலகு—வர த்யாகராஜநுதுடு வகதெலுப.................(வி)

பொருள்.

காஞ்சீவரதுடு - காஞ்சீபுரத்திலே கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் வரதராஜப்பெருமான், **விநதாஸுத வாஹனுடை** - கருடவாஹனனாக, வெடலெனு - பவனியாகப் புறப்பட்டான்; (அனைவீரும் தரிசியுங்கள், என்பது கருத்து).

வநஜாஸநாதி ஸுருலு - தாமரையைத் தனது பீடமாகக்கொண்ட பிரமதேவர் முதலிய தேவர்களும், ஸநகாதி முனுலு - ஸநகர் முதலான ரிஷிகளும், கொலுவ - புடைசூழ்ந்துவர, (வரதுடு வெடலெனு-வரதராஜப்பெருமான் பவனியாகப் புறப்பட்டான்.)

நெர வைசாகோத்ஸவமுன - பூர்ணமான வைகாசி மாத உற்சவத்திலே, சத தினகருலு - நூறு ஸூர்யர்கள், உதயிம்சிரோ யனி - உதயமானாற்போல, பஸ்சம கோபுரத்வாரமுன - மேலைக் கோபுரவாயிலிலே, சராசரமுலகு- சராசரங்களான எல்லா ஜீவராசிகளுக்கும், வகதெலுப - தன் மகிமையை உள்ளபடி புலப்படுத்துவதற்கு, வரத்யாகராஜநுதுடு - சிறந்த த்யாகராஜனால் கொண்டாடப்பட்டவனான, (வரதுடு வெடலெனு - வரதராஜப் பெருமான் புறப்பட்டான்.)

(அனைவரும்கண்குளிரத் தரிசனம்செய்யுங்களென்பது கருத்து.)

குறிப்புக்கள்.—விநதா ஸுதன் - காச்யப முனிவருக்கு விநதை என்பவளிடமாகப் பிறந்த புத்திரனான கருடன். இவனை ஸ்ரீமஹாவிஷ்ணு வாஹனமாகக் கொண்டார். காஞ்சீபுரத்தில் வைகாசி மாதத்தில் நடக்கும் கருடஸேவை உலகப் பிரசித்தம். 'பஸ்சம கோபுரத்வாரமுன'—வரதராஜப் பெருமானுடைய திருக்கோயிலின் முக்கிய கோபுரவாயில் மேற்கே யுள்ளதென்பது இங்கு அறியத்தக்கது.

இந்தக் கீர்த்தனம் ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமியாற் செய்யப்பட்டது அன்றென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்; ஆனால் அவர்கள் அதற்குத் தக்க காரணங் கூறவில்லை பல ஸங்கீத க்ரந்தங்களின் ஆசிரியராகவும், அடியேனுக்கு ஸங்கீத சாஸ்திரத்தின் நுண்ணிய அம்சங்களைக் கற்பித்த மஹானுபாவருமான காலஞ்சென்ற ஸ்ரீமான். K. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களே இக்கீர்த்தனத்தைச் செய்து த்யாகராஜ ஸ்வாமிகளின் முத்திரையுடன் வெளியிட்டதாகவும், இதுபோல "நதஜனபரிபால" "நீது சரணமுலே" என்ற ஸிம்ஹேந்த்ர மத்யமக் கீர்த்தனைகளையும் வேறு பல உருப்படிகளையும் அவரே இயற்றித் தியாகராஜ ஸ்வாமிகளின் முத்திரையை யமைத்ததாகவும் மேற்கூறிய சிறுபான்மையோர் வாய்கூசாது கூறுகின்றனர். ஸ்ரீமான் ஐயங்காரின் தமையனாரும், தற்சமயம் சென்னைச் சர்வகலாசாலை ஸங்கீதப் பிரதம ஆசிரியராயிருப்பவருமான ஸ்ரீமான் 'டைகர்' K. வரதாசாரியருங் கூட இவ்வாறே அபிப்பிராயப் படுவதைப்பற்றி அடியேன் துக்கிக்காம லிருக்கமுடியவில்லை. நான் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ ஐயங்காருடனேயே பெரும்பாலான காலத்தைக் கழித்தவன். ஆதலால் இத்தகைய அபிப்பிராயங்கள் உண்மையல்ல வென்பதையும், ஏதோ சிறிது பிசகினால் இவை பரவிவிட்டன வென்பதையும் நான் மிக வுறுதியாகக் கூறக்கூடும். என்னுடைய சந்தேகத்தையு நிவர்த்தித்துக்கொள்ள ஸ்ரீமான் ஐயங்காரை நேரிலும் இவ்விஷயமாகக் கேட்டுவிட்டேன். அவரும் அது உண்மை அன்று என உறுதியாக மறுத்துவிட்டார்.

ஹரிகாம்போஜி ராக லக்ஷணம்

இது 72 மேளகர்த்தா மதப்படி 28-வது கர்த்தா ராகமாகும். இது ஸர்வஸ்வர ஸம்பூர்ண, கமக, வரிக, ரக்தி ராகம். இதில் சதுச்ருதி ரிஷபம் அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சதுச்ருதி தைவதம், கைசிகிநிஷாதம் ஆகிய இந்தஸ்வரங்கள் இராகச் சாயா ஸ்வரங்களாம். இந்த ராகத்தில் பூர்வீக ஸங்கீத வித்வான்கள் அதிகக் கீர்த்தனைகள் செய்திருப்பதாகக் காணப்படவில்லை. ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகளே மற்றவர்களைவிட இந்த ராகத்தில் அதிகக் கீர்த்தனைகளைச் செய்திருக்கின்றார். இவ்விராகம் காலநியமக் கட்டுப்பாடுகளுமின்றி எப்போதும் பாடத் தகுந்தது.

[தேவாரப் பாடல்களில் திருத்தாண்டகங்கள் இந்த இராகத்திற் பாடப்பட்டு வருவதை அனைவரும் கவனித்திருக்கலாம்.]

ஆரோஹணம்:—ஸரிகமபதநிஸ.

அவரோஹணம்:—ஸ்நிதபமகரிஸ

ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம—மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனத்தை மத்யம காலத்திற் பாடவேண்டும்]

பல்லவி

ஸ்நிதநிஸா ; — நிஸ்நித — பாபா	பதநித — தபமக	ரி க ம க — கரிஸநி	||
வி . ந . தா ; — . . . . — ஸுத	வா ... — . . ஹ.	னு . . . — . . டை.	||
நீ தா நீ ஸா ; — ஸரிகம	பா —தநி,ஸா ஸ்	ஸ்நிரிஸ் — நிதபம	||
வெடலெ னு ; — கா. . .	ஞ் —சீ. . , வ	ர . . . — து. டு .	||
நிதநீஸா ; — நிஸ்நித பா —பா	நிததபமக—ரி க	மகரிக — க ரி ஸ நி	||
வி. நதா ; — . . . . ஸு—த	வா . . . . . —ஹ .	னு . . . — டை. . .	||
நீ தா நீ ஸா ; — ஸரிகம	பா— தநிஸாரிஸ்ஸா—ஸ்	ஸ்நிரிஸ் — நிதபம	||
வெடலெ னு ; — கா. . .	ஞ் — சீ. . . . . . —வ	ர . . து — டு . . .	|| (வி)

அநுபல்லவி

பதநீ —தநிஸா — ஸ்நிரிஸ் — நீ த ப	மா —பதநிதநீ	ஸாஸாஸா ;	||
வ . ந — ஜ . . — . . . . — . ஸ .	. —நா ...தி	ஸு ரு லு ;	||
நீ நீ—தநிஸ்ரிக்ம்க்ரிஸ் — நீ த	பம—பதநிதநீ	ஸாஸாஸா ;	||
வ ந—ஜ . . . . — . ஸ	. . —நா ...தி	ஸு ரு லு ;	||
பதநிஸ் — தநிஸ்ரிக்ம்க்ரிஸ் — நீ த	பம—பதநிதநீ	ஸா ரீ ரீ ;	||
வ. ந . — ஜா . . . . — . ஸ	. . —நா ...தி	ஸுருலு ;	||
க்ராக்ா— ம் க் ரீ — க்ரிஸா —ஸாஸா	பதநீ, — ஸ ஸா	ஸ்நிரிஸ்—நிதபம	||
ஸ ந — கா . . — தி . . —முனு	லு. . , — கொலு	வ ா . . . —. . . .	|| (வி)

சரணம்

; * த ப தா ; — தா; நீ;	; த நீ ஸ் ஸா	ஸ்நிரிஸ் —நிதபா	||
: * நெரவை ; — சா; கோ;	; த்ஸவமுன	ச . த . —தி . ன	||
, ம * தபதா; — தா; பதநித	நி—தநீஸ்ஸா	ஸ்நிரிஸ்— நிதபா	||
, . * நெரவை; — சா; கோ...	. —த்ஸவமுன	ச . த . — தி . ன	||
ப ம * பபா—பபா—மதபம—ககமா	; — கமா—பதா	நிஸ் நித—பா;	||
. . * கரு —லுத —யிம்...—சிரோ	; — யநி —பஸ்	ச . ம . —கோ;	||
; * தநிஸா — ஸ்நிரிஸ்நி— ஸ்நித	பம—பத நிதநீ	ஸாஸாஸா —ஸா	||
; * புரத்வா— ர . . . . — முந .	. . —சரா . சர	மு ல கு —கோ	||
; * தநிஸ்ரிக்ம்க்ரிஸ்நித— ஸ்நித	பம—பதநிதநீ	ஸாரீரீ—;	||
; * புரத்வா. . . . . ர . .— முந .	. . —சரா.சர	முலகு—;	||
காகா—ம்க்ரீ — க்ரிஸா— ஸாஸா	பதநீ, — ஸ்ஸா	ஸ்நிரிஸ்—நிதபம	||
வர —த்யாக— ரா. ஜ — நு து	டு. . , — வ க	தெ . லு— . . ப .	|| (வி)

எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L.ச்யாவனப்ராசா I.D.L.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்தூள்ளது) I.D.L.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசோந்த சிற்றமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் லோகல் எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199153

m211, N28 lcN
N34.7.3

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

ஒரு குடம் தண்ணீரால் இருகோலை:—பஞ்சாப்பைச் சேர்ந்த மூல்தானில் அமீர்பக்ஷ் என்பவரது ஸ்நானத்திற்காக அவரது நண்பர் ஒருவர் ஒரு குடம் தண்ணீர் பிடித்து வைத்திருந்தார். அத்தண்ணீரை அவர் மாமன் எடுத்து உபயோகித்துவிட்டார். அதனால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டதில் அமீர் தனது மாமனைக் குத்திக் கொன்றுவிட்டார். கொலைக் குற்றஞ்செய்த அமீர் சென்ற வாரத்தில் தூக்கில் இடப்பட்டார். அமீருக்குச் சமீபத்தில் தான் கலியாணமாயிற்றும்.

* * *

பெருஞ் சம்பளம்: — க்ரெட்டா கார்போ என்ற பேர்போன சினிமாநடிகைக்குக் கதை ஒன்றுக்கு ஐம்பதினாயிரம்பொன் வீதம் சம்பளமாம்.

* * *

பிச்சைக்காரச் செல்வன்:—போர்ச்சுகல் தேசத்தில் சேர்ப்பா என்ற இடத்தில் ஒரு பிச்சைக்காரனைக் கைது செய்தபொழுது அவனிடம் ஆயிரம் பொன் நோட்டுகள் இருந்தனவாம்.

* * *

சிறுமியின் தற்கொலை:—ஐரோப்பாவில் ஹாண்ட்சேகர் என்ற ஊரில் 13 வயது சென்ற பெண் ஒருத்தி தனது தோழிமார்களைப்போலத் தான் அழகாக ஆடை உடுக்க வழியில்லாததால் தற்கொலை செய்துகொண்டாளாம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

நாலு லட்சம் பொன் ஞாபகச் சின்னம்:—சமீபத்தில் அமெரிக்காவில் காலஞ்சென்ற சாஸ்திர நிபுணரான தாமஸ் அல்வா எடிசனது நினைவுக் குறியாக நாலுலட்சம் பொன் செலவில் ஓர் அழகிய கட்டடம் கட்டப்போகிறார்கள்.

* * *

கொலையாளிகள் சங்கம்:—சிங்சிங் என்னும் சிறையில் கொலையாளிகள் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களும் ஆயுள் பரியந்தம் தண்டனை விதிக்கப்பட்டவர்களுமான கொலையாளிகளே அச்சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

* * *

நீரிலும் நனையாத பத்திரிகை:—நீர் நிலைகளில் இறங்கி, மீன் பிடிப்போர், முத்துக்குளிப்போர், படகோட்டிகள், மாலுமிகள் முதலியவர்களுக்கும் பயன்படுமாறு தண்ணீரில் தோய்ந்தால் நனையாமலும் எழுத்து நிறங்குன்றாமலும் இருக்கும்படியான முறையில் இரு பிரான்சுப் பத்திரிகைகள் பாரிஸ்நகரில் வெளியாகின்றன.

* * *

உண்மை:—ஸண்டர்லந்தில் குருடர்களுக்காகத் தொண்டு புரியும் ஒருவர் பறவைகளின் இறகுகளால் செய்யப்பட்ட மெத்தை யொன்றை விலைக்கு வாங்கினார். அந்த மெத்தைக்குள் 196பவுன் 10 ஷில்லிங்குக்கு நோட்டுக்கள் இருந்தனவாம். அந்த மெத்தையை வாங்கியவர் பணத்தை எடுத்துக்கொண்டுபோய் விற்றவருக்கே உடனே கொடுத்துவிட்டாராம்.

* * *

சாப்பாட்டு ராமன்:—டோக்கியோவில் நடுவயதுள்ள ஒரு மனிதன் ஒரு விடுதிக்குச்சென்று ஏழு புட்டி பீர். 16 புட்டி சேக் (ஜப்பான் சாராயம்) மூன்று பெரிய டம்ளர் சோடா, நாலு சட்டி பச்சை மீன், மூன்று சட்டி பச்சடி, ஏழு கும்பா சாதம், ஒன்பது சட்டி கதம்பம், 17 பச்சை முட்டை, இவ்வளவும் சாப்பிட்டுவிட்டு விடுதிக்காரரை அழைத்துத் தனது சாப்பாட்டுக்குப் பணம்கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டுப் போனானும்.

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 தலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)